

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# நன்னெறிக் கல்வி
# PENDIDIKAN MORAL

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL
தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி

ஆண்டு
TAHUN
4


**PENULIS** / ஆசிரியர்கள்
Justin Jeevaprakash Santhanam
ஜஸ்தின் ஜீவபிரகாஷ் சந்தனம்
Packiam S.P. Murugiah
பாக்கியம் சு.ப. முருகையா

**EDITOR** / பதிப்பாசிரியர்கள்
Vanitha Darman
வனிதா தருமன்
Rajendram Perumal
இராஜேந்திரம் பெருமாள்

**PEREKA BENTUK** / வடிவமைப்பாளர்
Apputhi Murugaya
அப்பூதி முருகையா

**ILUSTRATOR** / ஓவியர்
Azrul Helmi Bin Abd. Wahab
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்
Maseh Bin Supian
மாசேஹ் பின் சுப்பியான்



Multi Educational Book Enterprise
2019

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku: 0036

KPM2019 ISBN 978-967-2046-34-9

Cetakan Pertama 2019

**© Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:14 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi Pendidikan, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Jabatan Penerangan Malaysia.

# உள்ளடக்கம்

## தொகுதி 1

### நெறி 1 : **இறை நம்பிக்கை**


1. இறை நம்பிக்கையை அறிவோம் 1
2. இறை நம்பிக்கையை நேசிப்போம் 2-3
3. பண்டிகைகளை அறிவோம் 4
4. நம்பிக்கைகளை மதித்திடுவோம் 5
5. நல்லுறவை வளர்ப்போம் 6
6. அண்டை அயலாரை மதிப்போம் 7

**மதிப்பீடு** 1, 2 8-9


## தொகுதி 2

### நெறி 2 : **நன்மனம்**


1. நன்மனத்துடன் நடந்துகொள்வோம் 10-11
2. அண்டை அயலாருக்கு உதவிடுவோம் 12
3. நன்மனத்தைக் காட்டுவோம் 13
4. நன்மனத்துடன் செயல்படுவோம் 14
5. நன்மனத்துடன் பெருமை கொள்வோம் 15
6. நன்மனத்துடன் விளையாடி மகிழ்வோம் 16-17

**மதிப்பீடு** 3, 4, 5 18-20


## தொகுதி 3

### நெறி 3 : **கடமையுணர்வு**


1. கடமையை ஏற்றுக்கொள்ளல் 21
2. கடமையுணர்ந்து கடமையாற்றுதல் 22-23
3. செயலில் கடமையுணர்வைக் காட்டுவோம் 24
4. பொறுப்புணர்ந்து செயல்படுவோம் 25
5. தொங்காடி செய்து மகிழ்வோம் 26
6. கடமையாற்றி மகிழ்வோம் 27

**மதிப்பீடு** 6 28


## தொகுதி 4

### நெறி 4 : **நன்றி நவில்தல்**


1. நன்றி மொழிவோம் 29
2. நன்றி பாராட்டுவோம் 30-31
3. நன்றியுணர்வுடன் செயல்படுவோம் 32
4. நன்றியுணர்வைக் கடைப்பிடிப்போம் 33
5. நன்றியில் திளைத்திடுவோம் 34
6. நன்றி கூறி மகிழ்வோம் 35
7. நன்றி நவில்வோம் 36

**மதிப்பீடு** 7 37


## தொகுதி 5

### நெறி 5 : **உயர்வெண்ணம்**


1. உயர்வெண்ணத்தைப் பாராட்டுவோம் 38
2. உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்போம் 39
3. உயர்வெண்ணத்தை அறிவோம் 40
4. உயர்வெண்ணத்தோடு செயல்படுவோம் 41
5. உயர்வெண்ணத்தில் திளைத்திடுவோம் 42
6. உயர்வெண்ணத்தைப் போற்றுவோம் 43
7. உயர்வெண்ணம் கொள்வோம் 44-45

**மதிப்பீடு** 8 46


## தொகுதி 6

### நெறி 6 : **மரியாதை**


1. மதித்துப் பழகுவோம் 47
2. செயலில் மரியாதை கொள்வோம் 48
3. மதித்துப் போற்றுவோம் 49
4. மரியாதையுடன் செயல்படுவோம் 50
5. மதித்து மகிழ்வோம் 51
6. மதித்து நடப்போம் 52
7. மதித்து நேசிப்போம் 53

**மதிப்பீடு** 9, 10 54-55


## தொகுதி 7

### நெறி 7 : **அன்புடைமை**


1. அன்பு காட்டுவோம் 56
2. அன்புடன் உதவுவோம் 57
3. அன்பை வெளிப்படுத்துவோம் 58
4. அன்பின் பெருமை அறிவோம் 59
5. அன்புடைமையை நேசிப்போம் 60
6. அன்புடைமையைக் கடைப்பிடிப்போம் 61
7. அன்புடைமையைச் செயல்படுத்துவோம் 62-63

**மதிப்பீடு** 11, 12 64-65


## தொகுதி 8

### நெறி 8 : **நடுவுநிலைமை**


1. நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்போம் 66-67
2. நடுவுநிலைமையுடன் செயல்படுவோம் 68-69
3. நடுவுநிலைமையை நிலைநாட்டுவோம் 70
4. நடுவுநிலைமையோடு வாழ்வோம் 71
5. நடுவுநிலைமையில் மகிழ்ச்சி கொள்வோம் 72
6. நடுவுநிலைமையில் துணிவு காட்டுவோம் 73

**மதிப்பீடு** 13, 14 74-75

## தொகுதி 9

நெறி 9 : **துணிவு**

1. துணிந்து செல்வோம் 76
2. துணிவுடன் பேசுவோம் 77
3. துணிந்து செயல்படுவோம் 78-79
4. துணிவுடன் தடுப்போம் 80
5. துணிவை நிலைநாட்டுவோம் 81
6. துணிவைக் கடைப்பிடிப்போம் 82

**மதிப்பீடு** 15 83

## தொகுதி 10

நெறி 10 : **நேர்மை**

1. நேர்மை கொள்வோம் 84
2. நேர்மையில் மனமகிழ்வோம் 85
3. நேர்மையை நிலைநாட்டுவோம் 86
4. நேர்மையுடன் நடப்போம் 87
5. நேர்மையைப் பாராட்டுவோம் 88
6. நேர்மையினால் உயர்வோம் 89
7. நேர்மையோடு வாழ்வோம் 90

**மதிப்பீடு** 16 91

## தொகுதி 11

நெறி 11 : **ஊக்கமுடைமை**

1. ஊக்கத்துடன் இருப்போம் 92
2. ஊக்கத்துடன் செயல்படுவோம் 93
3. ஊக்கமுடைமையைக் கடைப்பிடிப்போம் 94
4. ஊக்கமுடைமையை நிலைநாட்டுவோம் 95
5. ஊக்கமுடைமையைப் பாராட்டுவோம் 96
6. ஊக்கத்துடன் ஒன்றிணைவோம் 97
7. ஊக்கமது கைவிடேல் 98-99

**மதிப்பீடு** 17, 18 100-101

## தொகுதி 12

நெறி 12 : **ஒத்துழைப்பு**

1. ஒத்துழைப்பு நல்குவோம் 102-103
2. ஒத்துழைப்பைக் கடைப்பிடிப்போம் 104
3. ஒத்துழைத்து வாழ்வோம் 105
4. ஒத்துழைப்பைப் போற்றுவோம் 106
5. ஒத்துழைத்து உழைப்போம் 107
6. ஒத்துழைத்து வெல்வோம் 108-109
7. ஒத்துழைப்புடன் செயல்படுவோம் 110

**மதிப்பீடு** 19 111

## தொகுதி 13

நெறி 13 : **மிதமான மனப்பான்மை**

1. மிதமான மனப்பான்மை கொள்வோம் 112-113
2. மிதமான மனப்பான்மையை அறிவோம் 114-115
3. மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்போம் 116
4. மிதமான மனப்பான்மையுடன் நடப்போம் 117
5. மிதமான மனப்பான்மையால் மகிழ்வோம் 118
6. மிதமான மனப்பான்மையால் வெல்வோம் 119
7. மிதமான மனப்பான்மையோடு உயர்வோம் 120

**மதிப்பீடு** 20, 21 121-122

## தொகுதி 14

நெறி 14 : **விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை**

1. விட்டுக்கொடுப்போம் 123
2. விட்டுக்கொடுத்து வாழ்வோம் 124
3. விட்டுக்கொடுத்து நடப்போம் 125
4. விட்டுக்கொடுத்துப் பழகுவோம் 126
5. விட்டுக்கொடுத்து உயர்வோம் 127
6. விட்டுக்கொடுத்து மகிழ்வோம் 128
7. விட்டுக்கொடுத்துச் செயல்படுவோம் 129

**மதிப்பீடு** 22 130

# முன்னுரை

“நாடெங்கும் உள்ள கல்விக் கூடங்களே நான் செல்லும் ஆலயங்கள்; அவற்றில் மாணவச் செல்வங்களே நான் வணங்கும் தெய்வம்” என்றார் ஜவஹர்லால் நேரு. இத்தகைய பெருமை வாய்ந்த கல்விக் கூடங்களின் அடித்தளமே முறையான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைள்தாம் என்று கூறினால் அது மிகையாகாது.

முறையான கற்றலுக்குப் பெருந்துணையாக நிற்பது பாடநூலாகும். மேலும், தேசியக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில், நன்னெறிக் கல்வியானது நமது மாணவர்களின் உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் ஆகியவை ஒன்றாக இணைந்து சமன்நிலையை வளப்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மாணவர்கள் கற்கும் கல்வியானது அடிப்படை நன்னெறிப் பண்புகளை அடையத் துணைபுரிய வேண்டும்.

இப்பாடநூல் ‘நானும் என் அண்டை அயலாரும்’ எனும் கருப்பொருளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இதில் இறை நம்பிக்கை, நன்மனம், கடமையுணர்வு, நன்றி நவில்தல், உயர்வெண்ணம், மரியாதை, அன்புடைமை, நடுவுநிலைமை, துணிவு, நேர்மை, ஊக்கமுடைமை, ஒத்துழைப்பு, மிதமான மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகிய 14 நெறிகளைக் கொண்டு பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த 14 நெறிகளுக்குரிய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் 21ஆம் நூற்றாண்டுப் பயிற்றியல் முறை, உயர்நிலைச் சிந்தனைத் திறன், சிந்தனைக் குறிவரை (i-Think), விரவிவரும் கூறுகள் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தொகுதியிலும் கருத்துப்படிவம், திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு ஆகியவை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளாக வழங்கப்பட்டும் உள்ளன.

ஆசிரியர் கற்பித்தலுக்குத் துணையாக ஆசிரியர் குறிப்பும் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தும் வகையிலும், வளப்படுத்தும் வகையிலும் பல்வேறு (AR), (QR) நோக்குக் குறியீடுகள், படவுருக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பாடநூலானது நான்காம் ஆண்டில் காலடி பதிக்கும் மாணவர்களுக்கு மிகச் சிறந்த நூலாக அமையும் என்று நம்புகிறோம். இப்பாடநூலைப் படைப்பதற்கு உதவிய மலேசிய கல்வி அமைச்சுக்கு இவ்வேளையில் நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

**‘கல்வியைத் திறம்படக் கற்போம்**
**கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்’**

**நன்றி,**
**நூலாசிரியர்கள்**




இப்படவுரு நெறிகளை அறிமுகம் செய்யத் துணைபுரிகிறது.




இப்படவுரு பாடத்தை அறிமுகம் செய்ய உதவுகிறது.



இப்படவுரு மாணவர் கற்கப் போகும் நெறியை அறிமுகம் செய்கிறது.




இப்படவுரு நன்னெறிப் பண்பைத் திடப்படுத்தும் நடவடிக்கையைக் குறிக்கிறது.




இப்படவுரு அறவுணர்வை எளிமையாக அடைய வழிவகுக்கும் குறைநீக்கல் நடவடிக்கையைக் குறிக்கிறது.




இப்படவுரு அறவுணர்வை வளப்படுத்தும் சவால் மிகுந்த நடவடிக்கையைக் குறிக்கிறது.




இப்படவுரு (4C) 21ஆம் நூற்றாண்டின் கல்வி கற்றல் அணுகுமுறைகளுள் கலந்துரையாடும் கற்றல் முறையைக் குறிக்கிறது.




இப்படவுரு மாணவர்கள் சுயபரிசோதனை செய்து கொள்ளத் துணைபுரிகிறது.




இப்படவுரு பாடத் தொகுதியின் இறுதியில் மாணவர்கள் ஆற்றலை மேம்படுத்தும் மதிப்பீட்டுப் பகுதியைக் குறிக்கிறது.




இப்படவுரு நெறிகளுக்குரிய கற்றல் தர எண்ணையும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் அறியத் துணைபுரிகிறது.



இப்படவுரு உயர்நிலைச் சிந்தனைத் திறன் (KBAT) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இடுபணியைக் காட்டுகிறது.

**தெரிந்து கொள்க**

இப்படவுரு மாணவர்கள் கூடுதல் தகவலை அறிந்து கொள்ளத் துணைபுரிகிறது.

**சிந்தனைத் துளி**

இப்படவுரு மாணவர்கள் புதிய சிந்தனையையும் தகவல்களையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

**இணையத் தளம்**

QR நோக்குக் குறியீடு

App Store | Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய அகப்பக்கத்தைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேட (QR) நோக்குக் குறியீடு துணைபுரிகிறது.

ஜாப்பரைப் (ZAPPAR) பெறவும்

Google play | App Store

முன்கூட்டியே ஜாப்பர் (Zappar) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

இங்கு நோக்குக

AR நோக்குக் குறியீடு




# தொகுதி 1 இறை நம்பிக்கை

## பாடம் 1 இறை நம்பிக்கையை அறிவோம்



**தகவல் அறிக**

இந்து மதத்தைச் சேர்ந்த நம் அண்டை அயலார்கள் நேர்த்திக் கடனைச் செலுத்துவதற்காக பால் குடம் எடுப்பது வழக்கம். இவ்வாறு செய்வதன் மூலம் தாங்கள் நினைத்தது நிறைவேறும் என்றும் உடல், உள்ளம், ஆன்மா அனைத்தையும் இறைபக்தியில் முழுமையாகச் செலுத்த முடியும் என்றும் நம்புகின்றனர்.

வி.வ.கூ: நாட்டுப்பற்று | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

கருத்துப்படிவம்

பாடம் 2

# இறை நம்பிக்கையை நேசிப்போம்



### விசாக தினம்

உலகுக்குத் தியானத்தையும் அமைதியையும் போதித்த புத்தர் மகான் பிறந்த தினமாகவும் ஞானம் பெற்ற தினமாகவும் புத்த சமயத்தினர் விசாக தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

### கார்த்திகை திருநாள்

இந்து சமயத்தினர் திருக்கார்த்திகை நாளில் கோயில்களிலும் வீடுகளிலும் விளக்கேற்றி வழிபாடு செய்கின்றனர்.

### தேவாலயம் செல்லல்

கிறிஸ்துவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயம் சென்று விவிலியம் வாசிப்பதைக் கடவுளின் வார்த்தைகளை வாசிப்பதாக நம்புகின்றனர்.



### அறுவடைத் திருநாள்

செமாய் பூர்வக் குடியினர் விளைச்சல் செழிக்கும் என்ற நம்பிக்கையில் அறுவடைத் திருநாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

### தாடாவ் கெ அமாத்தான்

தாடாவ் கெ அமாத்தான் பண்டிகையின்போது கடாசான், டுசுன் பூர்வக்குடியினர் நெல் விளைச்சலைத் தரும் சக்தியை வழிபடுகின்றனர். சுமாசாவ் நடனத்தையும் ஆடி மகிழ்கின்றனர்.

### வைசாகி தினம்

சீக்கியர்கள் வைசாகி தினத்தன்று குருதுவாராவிற்குச் சென்று சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

மேற்கண்ட அண்டை அயலாரின் சமய வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் மதிப்பதற்கு ஏற்ற வழிகளைக் கண்டறிந்து வகுப்பு முறையில் கலந்துரையாடுக; பட்டியலிடுக.

1.1
1.2

ஆசிரியர் குறிப்பு:


- பல்வேறு சமயங்கள் கொண்ட அண்டை அயலாரின் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் அறியச் செய்தல்; சக நண்பர்களுடன் அதனையொட்டி நேர்காணல் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்





பாடம் 3

# பண்டிகைகளை அறிவோம்



அண்டை வீட்டு முஸ்லிம் நண்பர்கள் நோன்பு திறப்பதற்குமுன் வழிபாடு செய்கின்றனர்.



பக்கத்து வீட்டு இந்து நண்பர்கள் தேவாரம் பாடி வழிபாடு செய்கின்றனர்.



எதிர்விட்டுச் சீன நண்பர்கள் இறை வழிபாட்டின்போது உணவு வகைகளை வைத்து, ஊதுபத்தி ஏற்றி இறைவனை வணங்குகின்றனர்.

**சிந்தனைத் துளி**

**ஊருடன் கூடி வாழ்**
பொருள்:
நாம் வாழும் இடத்து மக்களின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப அவர்களோடு இணைந்து வாழ வேண்டும்.

**பார்த்து மகிழுங்கள்**

தங்களுடைய வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் பல்வேறு சமயத்தைச் சேர்ந்த அண்டை வீட்டுக்காரர்கள் எவ்வாறு மதிக்கின்றனர் என்பதைக் கூறுக.

1.2
1.3




ஆசிரியர் குறிப்பு:


- பல்வேறு சமயங்கள் கொண்ட அண்டை அயலாரின் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் பல்வேறு மூலங்களிலிருந்து திரட்டி ஒப்பிட்டுக் கூறச் செய்தல்.
- குழுமுறையில் திரட்டேடு தயார் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை
உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை
21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்




# பாடம் 4 நம்பிக்கைகளை மதித்திடுவோம்

நாளை பள்ளி விடுமுறை. டேவிட் தன் அண்டை வீட்டு நண்பர்களைப் பொது நூலகத்திற்குச் செல்ல அழைக்கிறான்.




மேற்கண்ட உரையாடலில் கூறப்படும் அண்டை அயலாரின் வழிபாட்டையும் நம்பிக்கைகளையும் மதிக்கும் முக்கியத்துவத்தைத் தனியாள் முறையில் விளக்குக.

**தெரிந்து கொள்க**

**'Chain Link' நடவடிக்கை**

சிறுசிறு துண்டுக் காகிதத்தில் கருத்துகளை எழுதி 'சங்கிலித் தொடர்' செய்து படைத்தல்.



**ஆசிரியர் குறிப்பு:**

1.3

- பல்வேறு மதங்களைக் கொண்ட அண்டை அயலாரின் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் மதிக்கும் வழிகளையும் முக்கியத்துவத்தையும் 'Chain Link' நடவடிக்கையின்வழி மாணவர்களுடன் மேற்கொள்ளுதல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

வளப்படுத்துதல்

பாடம் 5

# நல்லுறவை வளர்ப்போம்

நூருல் தன் அண்டை வீட்டுத் தோழி வேய் மெய்க்கு நோன்புப் பெருநாள் அன்று உணவு கொடுக்கச் சென்றாள்.



1 வேய் மெய், பெருநாளுக்குத் தயாரித்த கோழி ரெண்டாங்கை உனக்காக எடுத்து வந்துள்ளேன்.

2 மிக்க நன்றி நூருல். இருப்பினும், என்னால் இதைப் பெற்றுக் கொள்ள இயலாது. நானும் என் குடும்பத்தினரும் புலால் உட்கொள்ள மாட்டோம்.

3 ஏன் வேய் மெய்?

4 எங்கள் மதத்தில் உயிர்க் கொல்லாமை கொள்கையைக் கடைப்பிடிப்பதனால் புலால் உட்கொள்ள மாட்டோம்.

5 அப்படியா! என்னை மன்னித்து விடு. நான் உன் மத நம்பிக்கையை மதிக்கிறேன். அப்படியானால், உனக்குப் பழங்களைக் கொண்டு வருகிறேன், தோழி.

6 மிக்க நன்றி நூருல்.

## அண்டை அயலாரின் பண்டிகைகளையும் நம்பிக்கைகளையும்

1 மதிக்கும் போது ஏற்படும் மனவுணர்வு.

______________________________

2 மதிக்காத போது ஏற்படும் மனவுணர்வு.

______________________________

1.3
1.4
1.5

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரின் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் மதிக்கும்போது ஏற்படும் மனவுணர்வைக் கூறச் செய்தல்; வகுப்பு முறையில் கலந்துரையாடுதல்; மாணவர்களை நடித்துக் காட்டச் செய்தல்.


வி.வ.கூ: நாட்டுப்பற்று உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை 21-ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்




பாடம் 6

# அண்டை அயலாரை மதிப்போம்

ஒரு மாலை வேளை, சில அண்டை வீட்டுச் சிறுவர்கள் பூப்பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது...




**அண்டை அயலாரின் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் மதிக்கும் முறைகள்**

- அழைப்பை ஏற்றுச் செல்லுதல்
- இன்முகத்துடன் உரையாடுதல்
- இடையூறு ஏற்படுத்தாமல் இருத்தல்
- கேலிப் பேச்சைத் தவிர்த்தல்
- விட்டுக் கொடுத்துச் செல்லுதல்
- இணைந்து உதவி செய்தல்

ஆசிரியர் குறிப்பு:

1.2
1.3
1.5

- பள்ளியில் அண்டை அயலாரின் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் மதிக்கும் வழியைக் கற்றுத் தரும் நோக்கில் ஆசிரியர் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (பேட்டி காணுதல், நடித்துக் காட்டுதல், பேச்சுப் போட்டி நடத்துதல்).

வி.வ.கூ: நாட்டுப்பற்று   உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை   21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# மதிப்பீடு

**உன் அண்டை அயலாரின் இறை நம்பிக்கைகளைப் பட்டியலிடுக.**

1



மதம்: ______________________________

வழிபடும் இடம்: ______________________________

வழிபடும் முறைகள்: ______________________________

2



மதம்: ______________________________

வழிபடும் இடம்: ______________________________

வழிபடும் முறைகள்: ______________________________

3



மதம்: ______________________________

வழிபடும் இடம்: ______________________________

வழிபடும் முறைகள்: ______________________________

4



மதம்: ______________________________

வழிபடும் இடம்: ______________________________

வழிபடும் முறைகள்: ______________________________

1.2
1.3

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை 21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்



# மதிப்பீடு

## அ. சரியாகப் பதிலளித்திடுக.

1



உங்கள் எதிர்வீட்டில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது. அந்நிகழ்ச்சியை மதித்து நடக்க என்ன செய்வீர்கள்?

i) ______________________________________________

______________________________________________

ii) ______________________________________________

______________________________________________

## ஆ. அண்டை அயலாரின் பண்டிகைகளை விவரிக்கவும்.

1 நோன்புப் பெருநாள்

தொழுகை - பெற்றோர் 'சலாம்' - மன்னிப்புக் கேட்டல்

______________________________________________

______________________________________________

2 அறுவடை நாள்

ஈபான் - அறுவடை நாள் - இறைவனுக்கு நன்றி

______________________________________________

______________________________________________

1.2
1.3
1.4

ஆசிரியர் குறிப்பு:

- இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நாட்டுப்பற்று உ.சி.தி: மதிப்பிடுதல் 21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

# தொகுதி 2 நெறி அறிமுகம்

## நன்மனம்

### பாடம் 1 நன்மனத்துடன் நடந்துகொள்வோம்




வி.வ.கூ: சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்

## முதுமொழி

**கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்**
**தம்மால் இயலுதவி தாம்செய்வர் - அம்மா!**
**முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு**
**விளைக்கும் வலியனதாம் மென்று.**

**- சிவப்பிரகாச சுவாமிகள்**

**பொருள்:** முளைக்கும் பற்களானது கடினமான பொருள்களையும் தான் மென்று நல்ல சுவையை நாவிற்குக் கொடுக்கும். அது போலவே கற்றோரும் தன் மெய் வருத்தி, பிரதிபலன் கருதாது பிறர்க்கு உதவிடுவர்.




நீங்கள் அண்டை அயலாருக்கு நன்மனத்துடன் உதவிய சில சூழல்களைக் கூறுக; எழுதுக.

______________________________________________

______________________________________________

______________________________________________

சுயபரிசோதனை

பாடம் 2

# அண்டை அயலாருக்கு உதவிடுவோம்

மரத்திலிருந்து இறங்கத் தெரியாமல் உன் அண்டை வீட்டுக்காரரின் பூனைக் குட்டி ஆபத்தான நிலையில் மாட்டிக் கொண்டது. நீயும் சில நண்பர்களும் உதவுகிறீர்கள்...



மேற்கண்ட சூழலில் நீயாக இருந்தால் என்ன செய்வாய்? ஏன்?




இவர்கள் மனத்தில் என்ன நினைத்திருப்பர்? கூறுக.

2.1
2.2

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருக்கு உதவிய வழிகளை மனவோட்ட வரையில் பட்டியலிடச் செய்வித்தல்.
- அண்டை அயலாருக்கு உதவிய வழிகளைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** ஆய்வுச்சிந்தனை 21**ஆம் நூ. தி:** அன்பானவர்/பரிவுள்ளவர்




பாடம் 3

# நன்மனத்தைக் காட்டுவோம்

**பின்வரும் படச்சூழலைக் கொண்டு வாக்கியத்தை நிறைவு செய்க.**


1



வயதான - உணவு வழங்குதல்

______________________________

______________________________




விபத்து - உடல் நலம் - மகிழ்ச்சி

______________________________

______________________________




2






**அண்டை அயலாருக்கு எவ்விதத்தில் உதவியுள்ளாய்? குழுமுறையில் கலந்துரையாடி நிறைவு செய்க.**

உதவிய முறைகள்

- ______________
- அண்டை வீட்டுப் பாட்டிக்குச் சாலையைக் கடக்க உதவினேன்.
- ______________
- ______________

**தெரிந்து கொள்க**

கற்றல் உலா (Gallery Walk) நடவடிக்கை குழுமுறையில் சேகரித்த தகவல்களை வகுப்புமுறையில் நண்பர்களுடன் பகிர்தல்.






ஆசிரியர் குறிப்பு:

2.1
2.2

- அண்டை அயலாருக்கு நன்மனத்தோடு உதவிய முறைகளைப் பற்றி வகுப்புமுறையில் கலந்துரையாடுதல்.
- 'Gallery Walk' நடவடிக்கையின்வழி நன்மனத்துடன் உதவிய முறைகளைத் தெரிந்து கொள்ளுதல்.


**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு  **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல்  2 I**ஆம் நூ. தி:** குழுவாகச் செயல்படுதல்




பாடம் 4

# நன்மனத்துடன் செயல்படுவோம்

என் பெயர் கணேஸ்வரன். நான், நான்கு பாரதி வகுப்பில் பயில்கிறேன். மற்றவர்களுக்கு உதவுவதென்றால் எனக்குப் பிடிக்கும். குறிப்பாக என் அண்டை அயலாருக்கு நன்மனத்துடன் உதவுவதால் என்னை அனைவருக்கும் பிடிக்கும். இ∴து எனக்கு மகிழ்ச்சியையும் என் பெற்றோருக்கு நற்பெயரையும் பெற்றுத் தருகிறது. வாருங்கள், நான் செய்த நன்மனச்செயலின் நன்மைகளைப் பார்ப்போம்.




**அண்டை அயலாருக்கு உதவுவதன் முக்கியத்துவத்தைச் சரியாகக் கண்டுபிடித்து எழுதுக.**

1. உ _ வு _ லு _ ப _ ம்
2. _ ற் _ மை _ ற் _ டு _
3. ப _ மை _ ழி யு _

2.3



ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருக்கு நன்மனத்துடன் உதவ வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குழுவகச் சிந்திப்பு முறையில் மேற்கொள்ளுதல்.
- அண்டை அயலாருக்கு நன்மனத்துடன் உதவ வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடச் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்




பாடம் 5

# நன்மனத்துடன் பெருமை கொள்வோம்

அண்டை வீட்டுத் தோழிக்கு உதவுதல்


1



ஏற்பட்ட மனவுணர்வு: மகிழ்ச்சி, தோழிக்கு உதவி செய்தது.

அண்டை வீட்டு நாய்க்குட்டிக்கு உதவுதல்

2



ஏற்பட்ட மனவுணர்வு: பெருமை, ஓர் உயிரைக் காப்பாற்றியது .

3




பள்ளி முடிந்தது, அண்டை வீட்டு நண்பன் வீட்டிற்கு நடந்து செல்கிறான்.

என்ன நடந்திருக்கும்:______________________________

ஏற்பட்ட மனவுணர்வு :______________________________

2.4
2.5




ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருக்கு நன்மனத்துடன் உதவும்போது ஏற்படும் மன உணர்வை ஊகித்துக் கூறச் செய்தல்; நடித்துக் காட்டச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

வளப்படுத்துதல்

பாடம் 6


# நன்மனத்துடன் விளையாடி மகிழ்வோம்



## விளையாடும் முறை

1. மாணவர்கள் குழுமுறையில் நகர வேண்டும்.
2. ஆசிரியர் கொடுத்த பணி அட்டையில் உள்ள கேள்விகளுக்கு விடைகளை ஒவ்வொரு நிலையத்திலும் கண்டுபிடித்து எழுதினால் 5 புள்ளிகள் வழங்கப்படும்.
3. விரைவாகவும் சரியாகவும் விடையைக் கொடுத்து முடிவை அடையும் குழுவினரே வெற்றியாளர்கள் ஆவர்.




| நிலையம் | சரியான விடை |
|---|---|
| நன்மன நடவடிக்கைகள் யாவை? | ______________<br>______________<br>______________ |
| நன்மனத்தால் ஏற்படும் மனவுணர்வு என்ன? | ______________<br>______________<br>______________ |
| நன்மனத்தின் முக்கியத்துவம் என்ன? | ______________<br>______________<br>______________ |




2.4
2.5

ஆசிரியர் குறிப்பு:

- விளையாட்டில் அண்டை அயலாரை மதிக்கும் முறை, நன்மனத்துடன் நடப்பதன் முக்கியத்துவம் மற்றும் மனவுணர்வை அறிதல்; தெரிவு செய்து பட்டியலிடுதல்; வகுப்பு முறையில் படைத்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

## மதிப்பீடு

**நேர்காணல்வழி அண்டை வீட்டுத் தோழன் செய்த நன்மனச் செயல்களைக் கண்டறிதல்**




உன் நண்பர்கள், அண்டை வீட்டுத் தோழன் அல்லது தோழிக்குச் செய்த நன்மனச் செயல்களை நேர்க்காணல்வழி கண்டறிக.

2.2
2.3

**ஆசிரியர் குறிப்பு:**

- மேற்கண்ட சூழலை மாணவர்கள் வகுப்புமுன் பாகம் ஏற்றுப் படைத்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை | 21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்

# மதிப்பீடு

**நிறைவு செய்க.**

**மேலிருந்து கீழ்.**

1. அண்டை அயலாருடன் _____________ நடப்பது மனநிறைவை ஏற்படுத்தும்.
2. கிராமத் தலைவர் சேவையைப் பாராட்டி _____________ அட்டை தயாரித்துக் கொடுக்கலாம்.
3. சிரமப்படும் அண்டை அயலாருக்கு _____________ நீட்ட வேண்டும்.

**இடமிருந்து வலம்.**

4. அண்டை அயலார் கூறும் அறிவுரைகளை _____________ கேட்க வேண்டும்.
5. ஆபத்து வேளையில் உதவிய அண்டை அயலாருக்கு _____________ கூற வேண்டும்.
6. அண்டை அயலாரோடு _____________ நடந்து கொள்ள வேண்டும்.




2.1
2.4

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

# மதிப்பீடு

**அ. கீழ்க்காணும் சூழலில் அண்டை அயலார் என்ற முறையில் நீ ஆற்ற வேண்டிய கடமையை விளக்கி எழுதுக.**

உன் அண்டை வீட்டில் திருட்டு நடக்கிறது. நீ என்ன செய்வாய்?

______________________________________________


______________________________________________

ஏன்?

______________________________________________

______________________________________________

**ஆ. இங்கு நீ உதவ வேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.**



______________________________________________

______________________________________________

______________________________________________

**இ. மனவுணர்வைத் தெரிவு செய்க; வண்ணமிடுக.**

1 நோயுற்ற உன்னை, அண்டை வீட்டுக்காரர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல மறுக்கிறார்.

மனவருத்தம் | மனநிறைவு

2 ஆபத்து அவசர வேளைகளில் சலிக்காமல் அண்டை அயலாருக்கு உதவுகிறாய்.

மனவருத்தம் | மனநிறைவு

**தெரிந்து கொள்க**

காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை, மருத்துவமனை போன்ற எல்லா அவசர உதவிக்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எண் '999'. இந்த எண்ணைத் தவறாகப் பயன்படுத்துபவர் தண்டிக்கப்படுவார்.




2.2
2.3
2.4

**ஆசிரியர் குறிப்பு:**

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பயன்படுத்துதல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

நெறி அறிமுகம்

# தொகுதி 3 கடமையுணர்வு

## பாடம் 1 கடமையை ஏற்றுக்கொள்ளல்

பாட அறிமுகம்




1 உன் அண்டை வீட்டார் விடுமுறைக்கு வெளியே சென்று விட்டார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க நீ எம்மாதிரியான கடமைகளைச் செய்வாய்?

________________________________________

________________________________________

________________________________________

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

பாடம் 2

கருத்துப்படிவம்

# கடமையுணர்ந்து கடமையாற்றுதல்

அன்று மலேசிய தின விடுமுறை. துன் சம்பந்தன் கிராம மக்கள் அக்குடியிருப்பில் உள்ள சிறுவர் விளையாட்டுப் பூங்காவைச் சுத்தம் செய்து, விளையாட்டு உபகரணங்களைச் சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர்.



**சிந்தனைத் துளி**

பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு அவற்றைச் செவ்வனே செய்து முடிப்பதே சிறந்த கடமை உணர்வாகும்.




குழுப் பயிற்சி

**பட்டியலிடுக**

அண்டை அயலாருக்கு நான் ஆற்றிய கடமைகள்

**ஆசிரியர் குறிப்பு:**

3.1

- அண்டை அயலாரிடையே கடமையுணர்வுடன் நடந்து கொண்ட சில சூழல்களைப் பட்டியலிட்டு வகுப்பில் கூறச் செய்தல்.
- அண்டை அயலாருக்கு ஆற்றிய கடமைகளை மனவோட்ட வரைபடத்தில் படைக்கச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை 21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்

திடப்படுத்துதல்

பாடம் 3

# செயலில் கடமையுணர்வைக் காட்டுவோம்




3.1
3.2
3.4

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருக்கு எவ்விதத்தில் உன் கடமையைச் செய்வாய் என்பதை விளக்கிக் கூறுதல்.
- அவ்வாறான சில சூழல்களைப் பாகமேற்று நடித்துக் காட்டுதல்; வகுப்புமுறையில் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: அன்பானவர் / பரிவுள்ளவர்

குறைநீக்கல்

# பாடம் 4 பொறுப்புணர்ந்து செயல்படுவோம்

அண்டை அயலாருடன் கடமையுணர்வோடு நடப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வோம்.




அண்டை அயலாரிடம் கடமையுணர்வுடன் நடப்பதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக.

3.3

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடத்தில் கடமையுணர்வுடன் நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தை ஆராய்ந்து பட்டியலிடுதல்; பின் மனவோட்டவரையில் எழுதுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

பாடம் 5

# தொங்காடி செய்து மகிழ்வோம்

**தேவையான பொருள்கள்**

1. வண்ணத்தாள்கள் (4)
2. தடித்த அட்டை (2)
3. கத்தரிக்கோல்
4. நூல் கண்டு
5. பசை
6. குச்சி

1




படத்தில் காட்டுவது போல் வண்ணத் தாள்களைச் சம அளவாக வெட்டிக் கொள்ளவும்.

2



வெட்டிய வண்ணத் தாள்களை நட்சத்திர வடிவில் மடித்துக் கொள்ளவும்.

3



தடித்த அட்டையை விரும்பிய வடிவத்தில் வெட்டி, துளையிட்டுக் கொள்ளவும். அதன் மேல் கடமையுணர்வின் முக்கியத்துவத்தை எழுதிக் கொள்ளவும்.

4



நட்சத்திரங்களை வண்ண நூலில் கோத்துத் துளையிட்ட அட்டையில் கட்டிக் கொள்ளவும்.

5




தயார் செய்த தொங்காடியை வகுப்பில் மாட்டி அலங்கரிக்கவும்.

குழுப் பயிற்சி

எதிர்காலத்தில் அண்டை அயலாரின் கடமை உணர்வு எவ்வாறு இருக்கும் என்று ஊகித்துக் கூறுக; குழுவில் கலந்துரையாடுக.

**தெரிந்து கொள்க**

தொங்காடி (Mobail) அசைவுத்தன்மை கொண்ட தொங்கும் பொருள்.

3.3
3.4

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடத்தில் மிகுந்த கடமையுணர்வுடன் நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தை தொங்காடி (Mobail) வடிவத்தில் உருவாக்கிப் படைத்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: உருவாக்குதல் 21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்




பாடம் 6

# கடமையாற்றி மகிழ்வோம்

1 அண்டை வீடு தீப்பற்றியபோது உதவி செய்தேன்...






2 அண்டை வீட்டு நண்பர்கள் சிலர், குடியிருப்பு விளையாட்டு உபகரணங்களைச் சேதப்படுத்தியதைக் கண்டித்தேன்...






3 அண்டை வீட்டினுள் திருடன் நுழைவதைக் காவல் நிலையத்திற்குத் தெரிவித்தேன்...






1 அண்டை அயலாரிடம் கடமையுணர்வுடன் நடக்கும்போது ஏற்பட்ட மனவுணர்வை எழுதுக.

________________________________________

________________________________________

3.4
3.5



ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருக்கு உன்னால் இயன்ற கடமைகளை ஆற்றும்போது ஏற்படும் மனவுணர்வைப் பட்டியலிடச் செய்தல்; நடித்துக் காட்டுதல்.
- அண்டை அயலாரிடம் கடமையுணர்வுடன் நடப்பதைக் கடைப்பிடிக்க வலியுறுத்துதல்.


வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்




# மதிப்பீடு

## அ. சரியான விடையைத் தெரிவு செய்க.

1. குடியிருப்புப் பகுதியில் ஏற்பாடு செய்யும் கூட்டுப் பணியில் கலந்து கொள்வேன்.
2. அண்டை வீட்டில் குப்பைகளைக் கொட்டுவேன்.
3. அண்டை வீட்டில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு உதவுவேன்.



## ஆ. அண்டை அயலார் என்ற முறையில் ஆற்ற வேண்டிய கடமைகளைக் குறிப்பிடுக.

1. ______________________________
2. ______________________________
3. ______________________________

## இ. சூழலுக்கு ஏற்ற விடையை எழுதுக.

இரவு நேரத்தில் யாரோ இருவர் உன் எதிர்வீட்டுச் சாளரத்தின்வழி வீட்டினுள் நுழைவதைக் காண்கிறாய். நீ என்ன செய்வாய்?

______________________________

______________________________

______________________________

3.2
3.3
3.4




ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை 21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்

தொகுதி 4 நெறி அறிமுகம்

# நன்றி நவில்தல்

பாடம் 1 பாட அறிமுகம்

## நன்றி மொழிவோம்




### திருக்குறள்

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.** (குறள் 108)

பார்த்து மகிழுங்கள்

**பொருள்:** ஒருவர் நமக்குச் செய்யும் உதவியை மறப்பது நல்லதல்ல. அவர் செய்யும் குற்றத்தை உடனே மறந்து விடுவது நல்லது.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்


கருத்துப்படிவம்


பாடம் 2

# நன்றி பாராட்டுவோம்



இக்கதையில் அக்பரும் அவன் பெற்றோரும் காட்டிய நன்றியுணர்வு முறைகளைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக; பட்டியலிடுக.










ஆசிரியர் குறிப்பு:

4.1
4.4


- அண்டை அயலாரிடையே நன்றியைக் காட்டும் முறைகளை அறிதல்; பட்டியலிடுதல்.
- உதவிய அண்டை அயலாருக்கு நன்றி கூறும் மனப்பான்மையை ஊக்குவித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: அன்பானவர் /பரிவுள்ளவர்


திடப்படுத்துதல்

பாடம் 3


# நன்றியுணர்வுடன் செயல்படுவோம்



கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்திற்கு மருந்திட்ட அண்டை வீட்டு நண்பனுக்கு நன்றி கூறுவது அவசியம். அது நட்பையும் பாசத்தையும் வலுப்படுத்தும்.



உடைந்த நீர்க்குழாயைச் சரி செய்த திரு. மதிவாணனின் உதவியை மதிக்கும் வகையில், அப்பா கையைக் குலுக்கி நன்றி கூறினார். இச்செயல் அவர்மீது அப்பா வைத்துள்ள மரியாதையைக் காட்டுகிறது.




இரவு வேளைகளில் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டவர்களைப் பாராட்டுவது அவர்களின் தியாகத்தைப் போற்றுவதாகும்.

**சிந்தனைக்கு**

துன் அப்துல் ரசாக் 29 ஆகஸ்ட்டு 1975இல் குடியிருப்புப் பகுதி மக்களின் பாதுகாப்பு நலனைக் கருதி ‘ருக்குன் தெத்தாங்கா’ எனும் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

அண்டை அயலாருக்கு நன்றி நவில்வதன் அவசியத்தைப் பட்டியலிடுக; வகுப்பின் முன் படைத்திடுக.

4.1
4.2


ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருக்கு நன்றி கூறும் பண்பின் அவசியத்தை விளக்குதல்; பட்டியலிடுதல் .


வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: உருவாக்குதல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

குறைநீக்கல்

# பாடம் 4 நன்றியுணர்வைக் கடைப்பிடிப்போம்




முயலிடம் காணப்படும் நன்றியின்மையைப் பற்றிக் கலந்துரையாடுக.




ஆசிரியர் குறிப்பு:

4.3

- உதவிய அண்டை அயலாரிடையே நன்றி கூறாமல் உதாசீனப்படுத்தும்போது ஏற்படும் விளைவுகளைத் தொகுத்து வகுப்பின் முன் படைத்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்





## பாடம் 5 நன்றியில் திளைத்திடுவோம்

**1**




எனக்குத் திரட்டேடு செய்ய உதவிய அண்டை வீட்டு அண்ணனுக்கு நன்றி கூறி வாழ்த்து அட்டை கொடுத்தேன். இருவரும் மகிழ்ந்தோம்.

**2**




அம்மா மருத்துவமனையில் இருந்தபோது திருமதி லிம் எங்களைக் கவனித்துக் கொண்டார். அவருக்கு மலர்ச்செண்டுடன் நன்றியைத் தெரிவித்ததும் மனம் நெகிழ்ந்தார்.

ஏற்பட்ட மனவுணர்வு: ____________

**3**

நாங்கள் புதிதாகக் குடி வந்தபோது எங்களுக்கு உதவிய அண்டை வீட்டு திரு. ரம்லி குடும்பத்தினருக்கு விருந்து வழங்கி நன்றி கூறினோம்.

ஏற்பட்ட மனவுணர்வு: ____________



**ஆசிரியர் குறிப்பு:**

4.4
4.5

- அண்டை அயலாரின் உதவியைப் பெற்று அவர்களுக்கு நன்றி கூறும்போது ஏற்படும் மனவுணர்வை விவரித்தல்.
- அண்டை அயலாருக்கு வாழ்த்து அட்டை தயாரித்து வழங்கச் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்




பாடம் 6

# நன்றி கூறி மகிழ்வோம்

என் அப்பாவிற்குப் பதவி உயர்வு கிடைத்து, பணியிட மாற்றம் ஏற்பட்டது. இரண்டு நாள்களில் பணியில் சேர வேண்டும் என்பதனால் விரைவாக வீட்டுப் பொருள்களைக் கனவுந்தில் ஏற்ற முற்பட்டோம். அப்பொழுது அண்டை வீட்டுத் திரு. காசிம் குடும்பத்தினர் மிகுந்த உதவியாக இருந்தனர். அவர்களுக்கு நன்றி கூறும் வகையில் கடிதம் எழுதுகிறேன். நீங்களும் எனக்கு உதவுங்கள்.

மு. அன்பரசன்,
எண் 5, செமராக் 2,
30010 ஈப்போ,
பேராக்.
25 டிசம்பர் 2020.

அன்புள்ள திரு. காசிம் குடும்பத்தினருக்கு,

நாங்கள் ______________________________
______________________________
______________________________

பொருள்களை ______________________________
______________________________
______________________________

அம்மாவும் அப்பாவும் ______________________________
______________________________
______________________________

இப்படிக்கு,
______________
______________

4.1
4.5



ஆசிரியர் குறிப்பு:

- உதவிய அண்டை அயலாருக்கு நன்றிக் கடிதம் எழுதுதல்.
- அண்டை அயலாரின் சேவைகளை மாணவர்கள் பாராட்டிப் போற்றத் தூண்டுதல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

வளப்படுத்துதல்

பாடம் 7

# நன்றி நவில்வோம்

| தேவையான பொருள்கள் | |
|---|---|
| 1. அன்னாசி (சிறு துண்டுகள்) | 4. 1 எலுமிச்சை (பழச்சாறு) |
| 2. சிவப்புத் திராட்சை (சிறு துண்டுகள்) | 5. தேன் (1 மேசைக்கரண்டி) |
| 3. மாங்காய் (சிறு துண்டுகள்) | 6. தயிர் (4 மேசைக்கரண்டி) |

1



வெட்டித் துண்டுகளாக்கிய பழங்களை ஒரு பாத்திரத்தில் போடவும்.

2



அப்பழக்கலவையில் தயிர், தேன், எலுமிச்சைச் சாறு ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கிளறவும்.

3



நன்கு கிளறிய அப்பழக்கலவையை 5 நிமிடம் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.

4



இப்போது அப்பழக்கலவையை அழகிய பாத்திரத்தில் இட்டு நன்றி கூறும் வகையில் உங்கள் அண்டை அயலாருக்குக் கொடுத்து மகிழுங்கள்.

4.5

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலார் வழங்கும் சேவைகளுக்கு நன்றி கூறும் வகையில் மாணவர்கள் பழக்கூட்டு செய்து கொடுத்து மகிழ்வித்தல்.


வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும்    உ.சி.தி: உருவாக்குதல்    21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்



# மதிப்பீடு

## அ. நன்றியைப் புலப்படுத்திய முறையை எழுதுக.

சூழல் 1



அண்டை வீட்டுக்காரருக்குப் பலகாரம் செய்ய உதவுதல்.


நன்றியைப் புலப்படுத்திய முறை

______________________________

______________________________

______________________________

சூழல் 2



அண்டை வீட்டு முதியவருக்குச் சாலையைக் கடக்க உதவுதல்.

நன்றியைப் புலப்படுத்திய முறை

______________________________

______________________________

______________________________

## ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. இருவர் வீட்டு வளாகத்தையும் அழகுபடுத்திய அண்டை வீட்டுக்காரருக்கு...

   நன்றி கூறுவேன் | ஒன்றும் கூறமாட்டேன்

2. உன் அண்டை வீட்டார், அக்காவின் திருமண நிகழ்வுக்கு உதவியுள்ளார். அவருக்கு...

   நன்றி கூறுவேன் | ஒன்றும் கூறமாட்டேன்

4.1

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.


வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்




# தொகுதி 5 உயர்வெண்ணம்

## பாடம் 1 உயர்வெண்ணத்தைப் பாராட்டுவோம்

கிருஷ்ணாவும் சோங்கும் அண்டை வீட்டுக்காரர்கள். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். இருப்பினும், கிருஷ்ணா செய்த சிறு தவற்றினால் இவர்களுக்கிடையே மனவருத்தம் ஏற்பட்டது. மேலும், சோங் திட்டியதால் கிருஷ்ணா வருத்தம் அடைந்தான். ஒரு நாள்...




'குழுவகச் சிந்திப்பு' நடவடிக்கையை மேற்கொண்டு கீழே உள்ள கேள்விகளுக்குப் பதில் கூறுக.

1. மேற்கண்ட உரையாடலில் இடம்பெற்றுள்ள உயர்வெண்ண குணங்களைப் பட்டியலிடுக.
2. அண்டை அயலாரிடத்தில் உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்பதனால் என்ன நன்மை ஏற்படும்?

உன் அண்டை வீட்டு நண்பர்களுடன் பழகும்போது எம்மாதிரியான உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்பாய்? பட்டியலிடுக.


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்    21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்





பாடம் 2

# உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்போம்

## சூழல் 1




## சூழல் 2




1. மேற்கண்ட சூழல்கள் காட்டும் உயர்வெண்ணங்களைப் பட்டியலிடுக.
2. மேற்கண்ட சூழலில் நீங்கள் எவ்வாறு உயர்வெண்ணப் பண்பினை வெளிப்படுத்துவீர்கள்?




நீங்கள் அண்டை அயலாரிடையே கடைப்பிடிக்கும் உயர்வெண்ணத்தைக் குழுவில் கலந்துரையாடுக.

5.1
5.2
5.5




ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிக்கக் கூடிய செயல்களை விளக்குதல்.
- மேலே உள்ள சூழலைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.
- அண்டை அயலாருடன் பழகும் நெறிமுறைகளைப் பற்றிக் கலந்துரையாடுதல்; பட்டியலிடுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: சிந்தனை வியூகம்    21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்




பாடம் 3

# உயர்வெண்ணத்தை அறிவோம்

1





உயர்வெண்ணத்தைக் காட்டிய முறை



?

2




உயர்வெண்ணத்தைக் காட்டிய முறை



?

அண்டை வீட்டாரின் பிறந்தநாள் விழாவில் நீ கலந்து கொண்டாய். அங்கு நீ கடைப்பிடித்த பணிவன்பையும் நன்னடத்தையையும் குறிப்பிடுக.

________________________________________

________________________________________

________________________________________

ஆசிரியர் குறிப்பு:

5.2
5.3



- அண்டை அயலாருடன் பண்பான சொற்களைப் பயன்படுத்திப் பேசுவதன் வழிமுறைகளை ஆசிரியர் உணர்த்துதல்; விளக்குதல்.
- அண்டை அயலாருடன் பண்பான சொற்களைப் பயன்படுத்திப் பேசுவதன் வழிமுறைகளைப் பட்டியலிடுதல்; சக மாணவர்களுடன் கலந்துரையாடி பாடல் ஒன்று தயாரித்து வகுப்பில் பாடி மகிழ்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: மதிப்பிடுதல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்




# பாடம் 4 உயர்வெண்ணத்தோடு செயல்படுவோம்

அண்டை அயலாரிடத்தில் உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி கயல்விழியும் தாத்தாவும் கலந்துரையாடுகிறார்கள்.




## திருக்குறள்

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.** (குறள் 95)

**பொருள்:** பணிவு உடையவனாகவும் இனிய சொற்களைப் பேசுபவனாகவும் இருத்தலே ஒருவனுக்கு வெற்றியைத் தரும் அணிகலன்களாகும்.

அண்டை அயலாரிடையே உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தைப் பட்டியலிடுக.

5.3
5.4



ஆசிரியர் குறிப்பு:

- மாணவர்கள் அண்டை அயலாரிடம் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை விளக்குதல். அதனை ஒட்டி ஒரு புதிர்ப் போட்டி நடத்துதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்




பாடம் 5

# உயர்வெண்ணத்தில் திளைத்திடுவோம்

கீழ்க்காணும் சூழல்களில் அண்டை அயலாரிடத்தில் உயர்வெண்ணத்துடன் நடந்து கொண்டீர்களா? சுய மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்.

சூழல் 1



ஆம்: ☐ இல்லை: ☐

வெளிப்படுத்திய முறை: ______________________________
______________________________
______________________________

மனவுணர்வு: ______________________________

சூழல் 2



ஆம்: ☐ இல்லை: ☐

வெளிப்படுத்திய முறை: ______________________________
______________________________
______________________________

மனவுணர்வு: ______________________________

சூழல் 3



ஆம்: ☐ இல்லை: ☐

வெளிப்படுத்திய முறை: ______________________________
______________________________
______________________________

மனவுணர்வு: ______________________________

பேச்சிலும் செயலிலும் உயர்வெண்ணத்தைக் காட்டியதில் உனக்கு ஏற்பட்ட மனவுணர்வுகளைக் கூறுக.

ஆசிரியர் குறிப்பு:

5.4




- அண்டை அயலாரிடையே உயர்வெண்ணத்துடன் நடந்து கொள்ளும்போது ஏற்படும் மனவுணர்வைக் கூறச் செய்தல்; பட்டியலிடுதல்.
- பல்வேறு சூழல்களை வழங்கி அச்சூழலில் மாணவர்கள் நடந்துகொள்ளும் முறையையும் அவர்களுக்கு ஏற்படும் மனவுணர்வையும் கூறச் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

வளப்படுத்துதல்

# பாடம் 6 உயர்வெண்ணத்தைப் போற்றுவோம்


1



அண்டை வீட்டாரின் விருந்து நிகழ்ச்சியில் கார்த்திக் கைதவறி தேநீரைத் திரு. பிரபாகரனின் மேல் கொட்டி விட்டான்.

| உயர்வெண்ணத்துடன் நடந்த விதம் | காட்டிய உயர்வெண்ணத்தின் முக்கியத்துவம் | ஏற்பட்ட மனவுணர்வு |
|---|---|---|
| கார்த்திக் ________ | ________ | கார்த்திக் ________ |
| திரு. பிரபாகரன் ________ | ________ | திரு. பிரபாகரன் ________ |

2



எதிர்வீட்டுக் கதிரவன் தன் நண்பனுடன் திடலில் விளையாடிக் கொண்டிருந்தபோது குப்பை வீசுவதைச் சங்கவி பார்த்து விட்டாள்.

| உயர்வெண்ணத்துடன் நடந்த விதம் | காட்டிய உயர்வெண்ணத்தின் முக்கியத்துவம் | ஏற்பட்ட மனவுணர்வு |
|---|---|---|
| சங்கவி ________ | ________ | கயல்விழி ________ |
| கதிரவன் ________ | ________ | கதிரவன் ________ |

5.2
5.3
5.4

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடையே உயர்வெண்ணத்தைப் பேச்சிலும் செயலிலும் கடைப்பிடிப்பது அவசியம் என்பதை வலியுறுத்துதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: சிந்தனையாளர்




பாடம் 7

# உயர்வெண்ணம் கொள்வோம்



**உயர்வைத் தருவது ஒழுக்கம் - அதை**
**ஊரும் உலகும் மதிக்கும்**
**தவறுகள் மனிதனின் பழக்கம் - அதை**
**உணர்ந்தால் மன்னிப்பு கிடைக்கும்.**

<u>விதிமுறைகள்</u>

1. அம்புக்குறிகளைப் பின்பற்றிப் பயணம் செல்லவும்.
2. **சிவப்பு அம்புக்குறி** ➔ ஒரு கட்டம் பின்னோக்கிச் செல்லவும்.
3. **நீல அம்புக்குறி** ➔ கூடுதல் ஓர் ஆட்டம் தரும்.
4. x குறியீடு வந்தால் முதலில் இருந்து ஆரம்பிக்கவும்.




ஆசிரியர் குறிப்பு:

5.2
5.3
5.4

- அண்டை அயலாருடன் உயர்வெண்ணத்தைப் பேச்சிலும் செயலிலும் கடைப்பிடிப்பது அவசியம் என்பதை அறிந்து செயல்படுதல்.




# மதிப்பீடு

**அ. வாக்கியத்தில் விடுபட்டுள்ள உயர்வெண்ணத்தைக் குறிக்கும் சொற்கள் எழுத்துக் குவியலில் மறைந்திருக்கின்றன. நண்பர்களே! கண்டுபிடியுங்கள்.**



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | க | த | நி | அ | கி | ம | ச் | வ | து |
| கு | ன் | ம் | று | டு | யு | தி | ல | ண | கே |
| வு | ட | னி | கூ | ர் | தெ | த் | மூ | க் | ல் |
| பை | அ | ரு | ப் | ஊ | சி | து | தி | க | சு |
| ஏ | ள் | கெ | ர் | பு | ப் | தை | ன் | ம் | தூ |
| தீ | வே | ந | து | ல் | கோ | ள் | கி | உ | னு |
| ந | த் | ஒ | ற் | று | மை | நா | ய் | ழ் | ற் |
| ன் | ஆ | தே | மு | எ | ள் | கை | யி | கொ | ம் |
| றி | ஐ | இ | பை | கீ | நு | ஊ | த் | ண் | சை |




1. அண்டை அயலாரின் உதவியைப் பெற்றவுடன் முதலில் நாம் ________________கூற வேண்டும்.

2. வயதில் மூத்த அண்டை அயலாரைக் கண்டதும் ________________ கூறுவது சிறப்பு.

3. தவறுதலாக அண்டை வீட்டுப் பூந்தொட்டியை உடைத்து விட்டால் ________________கேட்க வேண்டும்.

4. பிற இனத்தைச் சேர்ந்த அண்டை அயலாரின் பண்பாட்டை ________________ நடந்து கொள்ள வேண்டும்.

5. குடியிருப்புக் கழகம் ஏற்பாடு செய்யும் துப்புரவுப் பணியில் ________________ உணர்வுடன் கலந்து கொள்ள வேண்டும்.






5.1
5.2
5.3

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு	உ.சி.தி: மதிப்பிடுதல்	21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்





# தொகுதி 6 மரியாதை

## பாடம் 1 மதித்துப் பழகுவோம்

அன்று மாலை நேரம். வீட்டில் பெரியவர்கள் யாரும் இல்லை. மலர்விழி தனியாக இருந்தாள். அப்பொழுது அந்தக் குடியிருப்பின் தலைவர், முதியவர் ஒருவரை வீட்டிற்கு அழைத்து வந்திருந்தார். அங்கு...







1. மலர்விழி தன் வீட்டிற்கு வந்தவர்களிடம் எப்படிப் பேசினாள்? ஏன் நாம் அவ்வாறு பேச வேண்டும்? குழுவில் கலந்துரையாடுக.
2. மேற்கண்ட சூழலை நடித்துக் காட்டுக.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்




பாடம் 2

# செயலில் மரியாதை கொள்வோம்

கிம் லீ எப்பொழுதும் தன் அண்டை அயலாரிடம் மரியாதையுடன் நடந்து கொள்வான். ஒரு மாலை வேளையில் கிம் லீ தன் தம்பியுடன் மேசைப்பந்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த அண்டை வீட்டு முகமதுவும் அவர்களுடன் விளையாட விருப்பம் தெரிவித்தான்.



கிம் லீ : தம்பி, நமது அண்டை வீட்டு முகமதுவும் நம்முடன் விளையாட விரும்புகிறான். சேர்த்துக் கொள்வோம்.

கிம் செங் : வேண்டாம் அண்ணா. அவனை எனக்குப் பிடிக்கவில்லை. அவனால் விளையாடவும் முடியாது.

கிம் லீ : அப்படிப் பேசுவது தவறு தம்பி. அவனுக்கு நாம்தானே ஆதரவாகவும் அன்பாகவும் இருக்க வேண்டும். அவன் நமது அண்டை வீட்டு நண்பன்.

கிம் செங் : முடியாது அண்ணா! முடியாது!

கிம் லீ : முகமது மாற்றுத்திறனாளியாக இருந்தாலும், நாம் அவனை மதித்து விளையாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலும், அவன் மனத்தைப் புண்படுத்தக் கூடாது.

கிம் செங் : மன்னித்து விடுங்கள் அண்ணா. நீங்கள் சொல்வதுதான் சரி. முகமதுவையும் விளையாட்டில் சேர்த்துக் கொள்வோம். வா, முகமது.

முகமது : என்னை உங்களோடு விளையாடச் சேர்த்துக் கொண்டதற்கு நன்றி கிம் செங், கிம் லீ.

பார்த்து மகிழுங்கள்

1. கிம் செங் மரியாதை குணத்துடன் நடந்து கொண்டானா? கலந்துரையாடுக; பின், கருத்தை வகுப்பில் தெரிவிக்கவும்.
2. நீங்கள் அண்டை அயலாருடன் மரியாதையாக நடந்து கொண்ட முறைகளைப் பட்டியலிடுக; வகுப்புமுன் கூறுக. (தனியாள் முறையில்)

ஆசிரியர் குறிப்பு:

6.1
6.2

- அண்டை அயலாரிடையே மரியாதையுடன் நடந்து கொள்ளும் சில சூழல்களை மாணவர்கள் பட்டியலிடுதல்; வகுப்புமுறையில் கலந்துரையாடுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு   உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்   21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்

திடப்படுத்துதல்

# பாடம் 3 மதித்துப் போற்றுவோம்

கிரன் அன்பானவன். நல்ல பண்புள்ளவன் எனப் பெயரும் வாங்கினான். பெற்றோருக்கு நற்பெயர் பெற்றுக் கொடுத்தான். கிரன் அனைவரிடமும் மரியாதையாகவும் பண்பாகவும் நடந்து கொள்வதைப் பார்ப்போம்.

காலையில் உடற்பயிற்சி செய்யும் முதியோர்களைப் பார்க்கும்போது



குடியிருப்புத் தலைவரைப் பார்க்கும்போது




வீட்டிற்கு வரும் அண்டை அயலாரை வரவேற்கும்போது




ருக்குன் தெத்தாங்கா இயக்கத்தின் பணியைப் பார்க்கும்போது



1. மனவோட்ட வரையில் கிரன் காட்டிய மரியாதைச் செயல்களைக் குறிப்பிடுக.
2. நீங்கள் கிரனைபோல் நடந்துள்ளீர்களா? வகுப்பில் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தெரிந்து கொள்க**

**வல்லுநர் இருக்கை (Hot Seat)** படித்த விஷயத்தை ஒட்டிய ஆய்வைக் குழு முறையில் மேற்கொண்டு படைத்தல். நிபுணர் ஒருவர் அதனை ஒட்டி கருத்தைக் கூறுதல்.

6.2
6.3

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:


- அண்டை அயலாரிடையே மரியாதை செலுத்தும் முறைகளை 'Hot Seat' முறையில் அறிதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆக்கச்சிந்தனை    21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்




# பாடம் 4 மரியாதையுடன் செயல்படுவோம்

அண்டை அயலாருக்கு மரியாதை கொடுத்து நடக்கும்போது ஏற்படும் நன்மைகளையும் மரியாதை கொடுத்து நடக்காதபோது ஏற்படும் தீமைகளையும் பார்ப்போம்.




**தெரிந்து கொள்க**

சிந்தி-இணை-பகிர் 'Think - Pair - Share' என்பது கூட்டு முறையில் சிக்கலுக்குத் தீர்வு காணும் ஒரு கற்றல் உத்தியாகும்.

**ஆசிரியர் குறிப்பு:**

6.2
6.3




- மாணவர்களை அண்டை அயலாரிடையே மரியாதைப் பண்பைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து 'Think - Pair - Share' நடவடிக்கையின்வழி கண்டறிதல், வகுப்பு முறையில் படைத்தல்.


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்




பாடம் 5

# மதித்து மகிழ்வோம்

ஆசிரியர் வானொலியை முடுக்கியவுடன் மாணவர்கள் வட்டத்தில் நகர்வர். இசை நிறுத்தப்பட்டவுடன் மாணவர்கள் நின்று விடுவர். வட்டத்தில் சில கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கட்டளைக்கேற்ப மாணவர்கள் செயல்படுவர். வாருங்கள் விளையாடலாம்.




1. நீங்கள் அண்டை அயலாரை மதித்துச் செயல்பட்டதுண்டா?
2. அண்டை அயலாரை மதித்து நடந்தபோது உங்களுக்கு ஏற்பட்ட மனவுணர்வு என்ன?

**தெரிந்து கொள்க**

**பாகமேற்று நடித்தல் (Role Play)**
பாகமேற்றுச் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

6.4
6.5



ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடையே மரியாதைப் பண்புகளைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் மன உணர்வைப் பாகமேற்று நடித்துக் காட்டுதல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: ஆக்கச்சிந்தனை 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

வளப்படுத்துதல்

# பாடம் 6 மதித்து நடப்போம்

மாநிலச் சதுரங்க விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு கேசவன், அவன் பள்ளித் தோழிகளான அண்டை வீட்டு மாலதியுடனும் சக்தியுடனும் சதுரங்கப் பயிற்சி மேற்கொண்டு விளையாடும்போது.




1. அண்டை அயலாரிடத்தில் நீ பயன்படுத்தியுள்ள மரியாதைச் சொற்களைப் பட்டியலிடுக.
2. கேசவன் கடைப்பிடிக்கும் மரியாதையைக் காட்டும் பண்பு பற்றிய உன் கருத்து என்ன? கூறுக; எழுதுக.

6.1
6.2
6.3

நடவடிக்கை


ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் மரியாதையாக நடந்து கொள்ளும்போது நமது மரியாதை உயரும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்துதல்; கவிதை அல்லது கதை கூறுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

வளப்படுத்துதல்

# பாடம் 7 மதித்து நேசிப்போம்




1. ராகுல் எத்தகைய பண்பை உடையவன்?
2. அண்ணனின் அறிவுரை என்ன?
3. நீங்கள் ராகுலாக இருந்திருந்தால், சரிதாவுக்கு எவ்வாறு மதிப்பு கொடுத்து நடந்திருப்பீர்கள்?

6.1
6.2
6.3
6.4
6.5

நடவடிக்கை

**ஆசிரியர் குறிப்பு:**

- நடைமுறை வாழ்க்கையில் அண்டை அயலாரிடம் மரியாதையைக் கடைப்பிடித்தலை மேற்கொள்ளுதல் என்பதனை மாணவர்களுக்கு உணர்த்துதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: மதிப்பிடுதல்    21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

# மதிப்பீடு

**அ. தகுந்த விடையை எழுதுக.**

அண்டை அயலாரை நாம் மதித்து நட்புறவோடு இருக்க வேண்டும். அவர்களை மதிப்பது மட்டுமல்லாமல் அவர்களின் உயர்ந்த குணத்தைப் போற்றி நல்லிணக்கத்துடனும் மரியாதையுடனும் பழகவேண்டும். அவர்களைக் காணும்பொழுது நலம் விசாரிக்க வேண்டும். அண்டை அயலாரின் அழைப்பை ஏற்று அவர்களின் இல்ல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும்.

அண்டை அயலாரை மதித்துப் போற்றுவதனால் உறவு வலுப்படுவதோடு, மனமகிழ்ச்சியையும் நம்மிடையே ஏற்படுத்தும். இது போன்ற பழக்க வழக்கம் மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்தும். ஒருவரை ஒருவர் மதிக்கும்போது மனமகிழ்ச்சி ஏற்படும். நாம் மதிக்கப்படுவதனால், அண்டை அயலாரைப் போன்றே நாமும் பெருமிதம் அடைகிறோம்.



அண்டை அயலாரை மதித்தல்

- முறைகள்
- முக்கியத்துவம்
- உணர்வு

6.3
6.4
6.5

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை மாணவர்களைச் செய்வித்தல்.

# மதிப்பீடு

## ஆ. சரியான பதிலை நிறைவு செய்க.




தமிழ்ச்செல்வன் அண்டை அயலாரை மதித்து நடக்கும் பண்பு மிகுந்தவன். இதனால், தமிழ்ச்செல்வனை அனைவருக்கும் பிடிக்கும். அண்டை அயலார் அவன்மீது அதிக அன்பு வைத்துள்ளனர். அவனது மரியாதை மிகுந்த உபசரிப்பில் நெகிழ்ந்து, அவனைப் பாராட்டினர்.

தமிழ்ச்செல்வன் ______________________________.
அண்டை அயலாருக்கு அவனை ______________________________ .
அனைவரும் அவன்மீது ______________________________ வைத்துள்ளனர்.
அவனது ____________________ உபசரிப்பில் ____________________
அவனைப் ____________________.


## இ. நிறைவு செய்க.

சூழல் 1




பாஸ்கரின் செயல் சரியா? : __________
ஏன்? : ______________________________
______________________________
______________________________

சூழல் 2




கஸ்தூரியின் செயல் சரியா? : __________
ஏன்? : ______________________________
______________________________
______________________________

6.3
6.5

ஆசிரியர் குறிப்பு:


- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.





# தொகுதி 7 அன்புடைமை

## பாடம் 1 அன்பு காட்டுவோம்

பள்ளி ஓய்வு மணி அடித்தது. முருகன் சிற்றுண்டிச் சாலையில் வாங்கிய உணவுடன் வருகிறான். அங்குத் தன் அண்டை வீட்டுத் தங்கை ரோஜா அழுது கொண்டிருப்பதைக் கண்டு விரைந்து செல்கிறான்.







இச்சூழலில் முருகனின் அன்பு எப்படி வெளிப்பட்டது?


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: சிந்தனை வியூகம் 21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

பாடம் 2

கருத்துப்படிவம்

# அன்புடன் உதவுவோம்

கடந்த வாரம் பெய்த கனத்த மழையால் எங்கள் ரிம்பா பாரு குடியிருப்புப் பகுதி பெரிதும் பாதிப்பிற்குள்ளானது. எங்களின் அண்டை வீட்டாரின் வீடு மிகவும் மோசமாகப் பாதிப்படைந்தது. எங்கள் குடியிருப்பில் உள்ள அனைவரும் அந்த வீட்டாருக்கு உதவ முன்வந்தோம்.




1. இவர்கள் செயலில் நீ எதனை உணர்கிறாய்?
2. அண்டை அயலாரிடையே உங்கள் அன்பைக் காட்டிய சில சூழல்களைக் கூறுக; பட்டியலிடுக.

இவர்கள் செய்த செயலைப் பற்றிய உன் கருத்து என்ன? கூறுக.

7.1
7.2
7.3

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரின்மீது நீங்கள் காட்டிய அன்பின் வெளிப்பாட்டினைக் கூறுதல்; மனவோட்டவரையில் எழுதிப் படைத்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: ஆக்கச்சிந்தனை | 21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்




பாடம் 3

# அன்பை வெளிப்படுத்துவோம்



விபத்தில் தம் கணவனை இழந்த திருமதி நிர்மலாவுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் பொருளுதவியையும் பணவுதவியையும் வழங்க நிதி திரட்டும் பணியில் நானும் ஈடுபட்டேன்.





என் அண்டை வீட்டுப் பாட்டி நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்தபோது அவரைக் கண்டு நலம் விசாரித்தேன்.





வெளியூருக்குச் சென்ற அண்டை வீட்டாரின் பறவைகளுக்கு உணவு கொடுத்தேன்.





அண்டை அயலாரிடத்தில் நான் அன்பை வெளிப்படுத்திய முறைகள்.

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________

**தெரிந்து கொள்க**

வட்ட மேசை (Round Table) நடவடிக்கை என்பது ஒவ்வொரு குழுவிற்கும் அட்டையில் வெவ்வேறு தலைப்பு கொடுத்து கலந்துரையாடுதலாகும்.



ஆசிரியர் குறிப்பு:

7.2
7.3




- அண்டை அயலாரின்மீது நீங்கள் கொண்ட அன்பின் வெளிப்பாட்டினை எவ்வாறு காட்டுவீர்கள் என்பதைக் கலந்துரையாடி, மனவோட்ட வரையில் படைத்தல்.
- அண்டை அயலாரின்மீது அன்பை வெளிப்படுத்திய முறைகளை வட்ட மேசை (Round Table) நடவடிக்கையை மேற்கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு   உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்   21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்




பாடம் 4

# அன்பின் பெருமை அறிவோம்

“மக்களுக்குத் தொண்டு செய்யவே நான் இங்கு வந்துள்ளேன்; உதவி செய்ய என்னை அழையுங்கள்” எனப் பொதுத் தொண்டுக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த ‘உலகின் சாதனைப் பெண்’ என அழைக்கப்பட்ட ஒருவரின் விவரங்களைப் பார்ப்போம்.

**பெற்ற விருதுகள்**

1950 பிறர் அன்பின் பணியாளர்
1962 இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது
1979 அமைதிக்கான நோபல் பரிசு
1980 பாரத ரத்னா

**கொள்கை**

‘ஒரு புன்னகையில் இருந்தே அமைதி பிறக்கிறது, நீங்கள் செல்லுமிடமெல்லாம் அன்பைப் பரப்புங்கள்’ என்பதாகும்

**தோற்றம்**

- சுருக்கங்கள் நிறைந்த முகம்
- கருணை பொங்கும் விழிகள்
- நீலக் கரையிட்ட வெள்ளைக் கைத்தறிச் சேலை

**‘பிறர் அன்பின் பணியாளர்’ எனும் சபைமூலம் ஆற்றிய சேவை**

- எய்ட்ஸ், தொழுநோய், காச நோய் ஆகியவற்றால் பாதிப்புற்றவர்களுக்கு நல்வாழ்வு மையங்கள் அமைத்தல்

**யார் இவர்?**

இவர் யார் என்று கண்டறிய ஆர்வமாக உள்ளதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிருக்கு *‘Puzzle’* தீர்வு காண ‘QR’ நோக்குக் குறியீட்டை நுணுகுக .

**செய்து மகிழுங்கள்**

1. மேற்குறிப்பிடப்பட்ட பெண்மணி தமது அன்பை வெளிப்படுத்திய முறையைப் பற்றி என்ன நினைக்கிறாய்?
2. அவர் அன்பை வெளிப்படுத்திய முறைகளைப் பற்றிக் கூறுக; எழுதுக.

7.4




ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடம் அன்பைச் செலுத்துவதனால் ஏற்படும் நன்மைகளைக் குழுவகைச் சிந்திப்பு முறையில் கூறச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: சிந்தனை வியூகம் | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

வளப்படுத்துதல்

பாடம் 5

# அன்புடைமையை நேசிப்போம்




**அட்டவணையை நிறைவு செய்க.**

| நீ மேற்கொண்ட அன்புடைமைச் செயல் | மனவுணர்வு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7.3
7.4
7.5

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடம் அன்பு செலுத்துவதால் ஏற்படும் மனவுணர்வைக் கூறச் செய்தல். இசைபட நடித்தல் (Pantomim) முறையில் நடித்துக் காட்டச் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு　　உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்　　21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்



வளப்படுத்துதல்

# பாடம் 6 அன்புடைமையைக் கடைப்பிடிப்போம்

அண்டை அயலாருக்கு உங்கள் அன்பைக் காட்டும் வகையில் ஒரு வாழ்த்து அட்டை தயாரித்துக் கொடுத்திடுக.

**தேவையான பொருள்கள்**

1. வண்ணத்தாள்கள்
2. கத்தரிக்கோல்
3. பசை
4. ஊற்றுத்தூவல் (Fountain Pen)




வண்ணத் தாளைப் பாதியாக வெட்டி இரண்டாக மடித்துக் கொள்ளவும்.




மடித்த வண்ணத்தாளில் இதய வடிவத்தைப் படத்தில் காட்டுவது போல் வரைந்து கொள்ளவும்.





வரைந்த இதய வடிவத்தைப் படத்தில் காட்டுவது போல் வெட்டிக் கொள்ளவும்.




வெட்டிய இதய வடிவத்தை மடித்து விரித்துப் படத்தில் காண்பது போல் திருப்பிக் கொள்ளவும்.




வேறு ஒரு வண்ணத் தாளை இரண்டாக மடித்து இதய வடிவத்தில் உள்ள தாளில் பசை தடவி ஒட்டவும்.




ஊற்றுத்தூவலைக் கொண்டு எழுதி, படங்களை ஒட்டி அலங்கரிக்கவும். அண்டை அயலாருக்குக் கொடுத்து மகிழுங்கள்; மகிழச் செய்யுங்கள்.

7.4
7.5



ஆசிரியர் குறிப்பு:


- இந்நடவடிக்கையைச் செய்வித்தல்.


பாடம் 7

வளப்படுத்துதல்

## அன்புடைமையைச் செயல்படுத்துவோம்

### வாருங்கள், விளையாடி அன்பினால் வெற்றி அடைவோம்.






7.2
7.3
7.4

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடம் அன்பு செலுத்தி நடக்கும் முறைகளை நடைமுறையில் செயல்படுத்த வலியுறுத்துதல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

# மதிப்பீடு

**அ. கீழ்க்காணும் சூழலைப் படித்து உன் பதிலை எழுதுக.**



உன் அண்டை வீட்டு நண்பர்கள் நட்பையும் அன்பையும் மறந்து சண்டையிடுவது...

சரி ☐ தவறு ☐

ஏன்?

விளைவு?

உன் மனவுணர்வு?

**ஆ. கீழ்க்காணும் சூழலில் நீ எப்படி அண்டை அயலாரிடம் அன்பு செலுத்துவாய் என்பதைக் குறிப்பிடுக.**

1. நோய்வாய்ப்பட்ட உன் அண்டை வீட்டாரிடம் உன் அன்பை எப்படி வெளிப்படுத்துவாய்?

______________________________

______________________________

2. உன் எதிர்வீட்டு நண்பன் சாலை விபத்து ஒன்றில் தன் தந்தையை இழந்து விட்டான். உன் அன்பை எவ்வாறு வெளிப்படுத்துவாய்?

______________________________

______________________________

7.3
7.4

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: மதிப்பிடுதல் 2 ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்



# மதிப்பீடு

## இ. சூழலை வாசித்து உங்கள் மனவுணர்வுகளைக் குறிப்பிடுக.

| வசதி குறைந்த அண்டை வீட்டாருக்கு உணவு வழங்குவது. | அண்டை வீட்டார் குப்பைகளை வகைப்படுத்தி மறுசுழற்சித் தொட்டிக்குள் போடாதது. |
|---|---|
| மனவுணர்வு:<br>____________________<br>____________________ | மனவுணர்வு:<br>____________________<br>____________________ |

## ஈ. அண்டை அயலாரிடம் அன்பை வெளிப்படுத்தும் வகையில் ஒரு நன்றி மடலைத் தயார் செய்து வழங்கிடுக.

சூழல் - உன் பாட்டி மருத்துவமனையில் இருந்தபோது வந்து ஆறுதல் கூறிய அண்டை அயலாருக்கு நன்றி மடல்.

________________

________________

________________

________________

அன்புள்ள,

________________________________________

________________________________________

________________________________________

இப்படிக்கு,

________________

________________

7.3
7.4
7.5



ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

நெறி அறிமுகம்

# தொகுதி 8 நடுவுநிலைமை

பாட அறிமுகம்

## பாடம் 1 நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்போம்



## திருக்குறள்

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி.** (குறள் 118)

**பொருள்:** முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.




1. மேற்கண்ட சூழலை நடித்துக் காட்டுக.
2. ஜெயமணியின் தந்தை நடுவுநிலைமையைக் கடைப்பிடித்ததை நீ எவ்வாறு அறிந்தாய்? விளக்குக.

விவகூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

கருத்துப்படிவம்

# பாடம் 2 நடுவுநிலைமையுடன் செயல்படுவோம்

நீ சாலையில் நடந்து செல்கிறாய். சாலையின் ஓரத்தில் உன் அண்டை வீட்டுக்காரர்களான ஆ சோங்கும் சூல்கிப்பிலியும் சண்டையிட்டுக் கொள்வதைக் காண்கிறாய்.




ஆசிரியர் குறிப்பு:

8.1
8.2

நடவடிக்கை

- அண்டை அயலாரோடு நடுவுநிலையாகச் செயல்படும் செயல்களைப் பட்டியலிடுதல்; கலந்துரையாடுதல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

## திருக்குறள்

**தகுதி எனஒன்று நன்றே பகுதியால்**
**பாற்பட்டு ஒழுகப் பெறின்.** (குறள் 111)

**பொருள்:** பகைவர், அயலார், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.







1. நீங்கள் சூல்கிப்பிலியாக இருப்பின் என்ன நடவடிக்கை எடுத்திருப்பீர்கள்? ஏன்?
2. அண்டை அயலாரிடையே நீ நடுவுநிலைமையைக் கடைப்பிடித்த செயல்களைக் குழுவில் கலந்துரையாடுக; பட்டியலிடுக.

திடப்படுத்துதல்

# பாடம் 3 நடுவுநிலைமையை நிலைநாட்டுவோம்



தமிழ்மலரும் அவள் தோழி கதிஜாவும் அண்டை வீட்டு நண்பர்கள். ஒரு நாள் இருவருக்கும் ஊஞ்சல் ஆடுவதில் வாக்குவாதம் ஏற்பட்டது. சத்தம் கேட்டுத் தமிழ்மலரின் அண்ணன் அவர்கள் இருவரையும் விசாரித்தார். தங்கை என்றும் பாரபட்சம் பார்க்காமல் நடுவுநிலைமையாக வாக்குவாதத்தைத் தீர்த்து வைத்தார். கதிஜா நன்றி கூறினாள். தமிழ்மலரும் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டாள். இருவரும் மகிழ்ச்சியாக ஊஞ்சல் ஆடினர்.

**பூர்த்தி செய்க.**

நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்பதன் நன்மைகள்

பகைமை ஏற்படாது

ம__ __ரு__ __ம் ஏற்படாமை

சம___லை ஏற்படும்

பா __ __ ட் __ மி ___மை நிலவும்

**சிந்தனைத் துளி**

நடுவுநிலைமை நின்றார்க்கு நாளும் நன்மையே
நடுவுநிலைமை விட்டார்க்கு என்றும் தீமையே

ஆசிரியர் குறிப்பு:

8.2
8.3
8.5

நடவடிக்கை

- அண்டை அயலாரோடு கடைப்பிடித்த சில நடுவுநிலைமைச் செயல்களின் நன்மைகளைக் கலந்துரையாடுதல்; பட்டியலிடுதல்.
- அண்டை அயலாருடன் நடுவுநிலைமையுடன் நடந்து கொண்ட சூழல்களை நடித்துக் காட்டுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்




# பாடம் 4 நடுவுநிலைமையோடு வாழ்வோம்

## சூழல் 1



எங்களின் குடியிருப்புத் திடலில் பாரபட்சமின்றி ஒற்றுமையாக விளையாடினோம்.

விளைவு: அண்டை அயலாரிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படும்.

## சூழல் 2




கிராமத்தலைவர் வழங்கிய காற்பந்தை நானே எடுத்துக் கொண்டேன்.

விளைவு: ______________________________

## சூழல் 3



கூட்டுப்பணித் தலைவர் வேலைகளைச் சமமாகப் பகிர்ந்து கொடுத்தார்.

விளைவு: ______________________________

## சூழல் 4



தீபாவளிப் பலகாரங்களை என் பணக்கார நண்பருக்கு மட்டுமே கொடுத்தேன்.

விளைவு: ______________________________

பேருந்து நிறுத்தம் நடவடிக்கையின் மூலம் மேற்கண்ட சூழல்களின் விளைவுகளை வகுப்பு முறையில் விளக்குதல்.

**தெரிந்து கொள்க**

**பேருந்து நிறுத்தம் (Bus Stop)** நடவடிக்கையை மேற்கொள்ளுதல். மாணவர்கள் குழுமுறையில் ஒவ்வொரு நிலையத்திற்கும் நகர்ந்து, அங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு/ படத்தையொட்டிக் கலந்துரையாடுதல்; பகிர்தல் மற்றும் குறிப்பெடுத்தல்.



8.3

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு நடுவுநிலைமையான செயல்களைப் பின்பற்றாததால் ஏற்படும் விளைவுகளை எழுதுதல்; கூறுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்




பாடம் 5

# நடுவுநிலைமையில் மகிழ்ச்சி கொள்வோம்

1. வெள்ளத்தின்போது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவித் தொகையைத் தலைவர் சமமாகப் பிரித்துக் கொடுத்தார்.

   அவர் செய்தது: சரி ☐ தவறு ☐

   ஏன்: ______________________________

   ______________________________

   ______________________________

   மனவுணர்வு: ______________________________

2. சிறு பிள்ளைகளுக்கிடையே விளையாட்டுத் திடலில் ஏற்பட்ட சிக்கலைத் தீர விசாரிக்காமல் திரு. கார்த்திக் தம் உறவினருக்காக வாதாடுகிறார்.

   அவர் செய்தது: சரி ☐ தவறு ☐

   ஏன்: ______________________________

   ______________________________

   ______________________________

   மனவுணர்வு: ______________________________

3. பிறந்தநாள் அணிச்சலைத் தன் அண்டை வீட்டுச் சீன நண்பனுக்கு மட்டுமே கொடுத்தான் அன்பரசன்.

   அவன் செய்தது: சரி ☐ தவறு ☐

   ஏன்: ______________________________

   ______________________________

   ______________________________

   மனவுணர்வு: ______________________________

8.3
8.4



ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு நடுவுநிலைமைச் செயல்களைப் பின்பற்றுவதனால் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுதல்; பட்டியலிடுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21-ஆம் நூ. தி: சிந்தனையாளர்




பாடம் 6

# நடுவுநிலைமையில் துணிவு காட்டுவோம்

ரேவதி, அகிலன் தலைமையில் சிறுவர் தின விளையாட்டுப் போட்டி நடைபெறுகிறது. இவர்கள் போட்டி விதிமுறைகளை நடுவுநிலைமையாக கடைப்பிடிப்பதன் அவசியத்தையும் பங்கேற்பாளருக்கு விளக்குகிறார்கள். வாருங்கள் பார்ப்போம்.




**ஆசிரியர் குறிப்பு:**

8.3
8.4
8.5

- அண்டை அயலாரோடு எந்தச் சூழலிலும் நடுவுநிலைமை மனப்பான்மையுடன் நடந்து கொள்ளும் அவசியத்தை அறிதல்.
- அண்டை அயலாரிடையே நடுவுநிலைமையாக நடந்துகொள்வதைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

# மதிப்பீடு

## புத்தக அடையாளக்குறி செய்வோம்.

அண்டை அயலாரிடையே நடுவுநிலைமையைக் கடைப்பிடிக்கும் நண்பர்களை வாழ்த்திப் பாராட்டும் வகையில் புத்தக அடையாளக்குறி தயாரித்துக் கொடுத்தல்.

**தேவையான பொருள்கள்**


1. வண்ணத்தாள்கள்
2. பசை
3. காகிதச் செருகி
4. வண்ண நூல்கண்டு
5. கத்தரிக்கோல்
6. அடிக்கோல்

1

வண்ணத்தாளில் படத்தில் உள்ளது போல் வடிவங்களை வரைந்து இரண்டாக வெட்டிக் கொள்ளவும்.

2

பிறகு, வெட்டிய வண்ணத்தாளில் படத்தில் காணப்படுவது போல் வரைந்து கொள்ளவும்.

3

காகிதச் செருகியின் இரு புறங்களிலும் ஒட்டவும்.

4

பிறகு, காகிதச் செருகியின் முனையில் வண்ண நூல்கண்டை 15cm வெட்டிக் கட்டிக் கொள்ளவும்.

5

நூல்கண்டின் அடிப்பகுதியில் வரைந்த இரண்டு வண்ணத் தாள்களையும் படத்தில் உள்ளது போல் ஒட்டி நடுவுநிலைமையைக் குறிக்கும் சொற்களை எழுதவும்.

6

புத்தக அடையாளக்குறி தயார். அண்டை வீட்டாரிடம் கொடுத்து மகிழுங்கள்.

8.4
8.5

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட நடவடிக்கையை மாணவர்களைச் செய்வித்தல்; கொடுக்கச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: ஆக்கச்சிந்தனை 21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

# மதிப்பீடு

**நீங்கள் கீழேயுள்ள சூழலில் கடைப்பிடித்த நடுவுநிலைமையை எழுதுக.**


1



கடைப்பிடித்த நடுவுநிலைமை

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________

2



கடைப்பிடித்த நடுவுநிலைமை

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________

3

நண்பர்களே, நீங்களும் என்னைப் போல் அண்டை அயலாருடன் நடுவுநிலைமையுடன் செயல்பட்டுள்ளீர்களா? எந்தச் சூழல்? பட்டியலிட்டு மனவுணர்வை எழுதுக.

| சூழல் | மனவுணர்வு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

ஆசிரியர் குறிப்பு:

8.3
8.4

• இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்




# தொகுதி 9 துணிவு

நெறி அறிமுகம்

## பாடம் 1 துணிந்து செல்வோம்

பாட அறிமுகம்




இது போன்ற நிகழ்வுகள் உன் வாழ்க்கையிலும் ஏற்பட்டதுண்டா? நீ ஏமாற்றப்பட்ட அச்சிறுவனாக இருந்தால், உனக்கு உதவிய உன் அண்டை வீட்டாரின் துணிவைப் பற்றி என்ன நினைக்கிறாய்? பட்டியலிடுக.

________________________________________

________________________________________

________________________________________

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு

உ.சி.தி: பகுத்தாய்தல்

21ஆம் நூ. தி: தொடர்பு கொள்ளும் திறன்





பாடம் 2

# துணிவுடன் பேசுவோம்




சில இளைஞர்கள் விளையாட்டுப் பூங்காவைச் சேதப்படுத்திக் கொண்டிருந்தனர். இச்சூழலில் நானும் என் நண்பர்களும் துணிவுடன் அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம்.





அண்டை வீட்டுச் சுவரில் சில சிறுவர்கள் கிறுக்குவதைக் கண்ட நான் கண்டித்தேன். மனம் வருந்தினர்; மீண்டும் செய்ய மாட்டோம் என உறுதி கூறினர். நான் மனம் மகிழ்ந்தேன்.






உன் துணிச்சலான செயல் என்ன?

________________________________________

________________________________________

________________________________________




9.1
9.2

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் துணிவாகக் கருத்துகளை வெளிப்படுத்திய சில செயல்களைப் பட்டியலிடுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்

திடப்படுத்துதல்

பாடம் 3

# துணிந்து செயல்படுவோம்

மாலை வகுப்பு முடிந்து லிம் கிங் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வழியில் யாரோ உதவி கேட்டு அலறும் சத்தம் கேட்டது. சத்தம் வந்த இடத்தை நோக்கிச் சென்றான். அங்கு அவன் அண்டை வீட்டு நண்பனின் வீடு தீப்பிடித்து எரியும் காட்சியைக் காண்கிறான். சற்றும் தாமதிக்காமல் மற்ற அண்டை அயலாரிடம் விபரத்தைக் கூறி அழைத்து வந்தான்.






துணிவுடன் செயல்படுவது பற்றிக் குழுவில் கலந்துரையாடுக.

குழுப் பயிற்சி

ஆசிரியர் குறிப்பு:

௯.1
௯.2
௯.3

- அண்டை அயலாருக்குத் துணிவாக உதவும்போது ஏற்படும் சிக்கல்களை எப்படி எதிர்கொள்வாய் என்பதை நண்பர்களுடன் கலந்துரையாடி பகிர்ந்து கொள்ளுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: அன்பானவர்/பரிவுள்ளவர்




பாடம் 4

# துணிவுடன் தடுப்போம்

கீழ்க்காணும் சூழலில் நீங்கள் எவ்வாறு துணிவுடன் செயல்படுவீர்கள். அதன் முக்கியத்துவம் என்ன?


1




**துணிவுடன் செய்தது:** பண்பற்ற செயலைப் புரிந்த அச்சிறுவனை நான் கண்டிப்பேன். வீசிய குப்பையை மீண்டும் எடுக்கச் சொல்வேன்.

**செயலின் முக்கியத்துவம்**: மீண்டும் இம்மாதிரியான செயலைச் செய்யாமலிருக்கச் செய்தல்.

2




துணிவுடன் செய்தது: ______________________________
______________________________
______________________________

செயலின் முக்கியத்துவம்: ______________________

3



துணிவுடன் செய்தது: ______________________________
______________________________
______________________________

செயலின் முக்கியத்துவம்: ______________________

4



துணிவுடன் செய்தது: ______________________________
______________________________
______________________________

செயலின் முக்கியத்துவம்: ______________________

9.2
9.3



ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருக்குத் துணிவுடன் செயல்படுவதன் அல்லது உதவுவதன் முக்கியத்துவத்தைக் கற்றல் உலா (Gallery Walk) முறையில் மேற்கொள்ளச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்   உ.சி.தி: பகுத்தாய்தல்   21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்




பாடம் 5

# துணிவை நிலைநாட்டுவோம்

## சூழல் 1



நானும் தோமசும் பள்ளி முடிந்து வீடு திரும்பும் பாதையில் எங்கள் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த சில இளைஞர்கள் எங்கள் அண்டை வீட்டுத் தங்கையைக் கேலிவதை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தோம். உடனே, துணிச்சலுடன் காவல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு தகவல் கூறினோம். காவல் துறையினரும் அவர்களைக் கைது செய்து தங்கையைக் காப்பாற்றினர். நாங்கள்...

மனவுணர்வு: மகிழ்ச்சி மற்றும் பெருமை அடைந்தோம்.

## சூழல் 2




அடுக்கு மாடியில் இருக்கும் ஒரு சிறுவன் மின்தூக்கியைச் சேதப்படுத்துவதைப் பார்க்கிறாய். அச்சிறுவனை...

மனவுணர்வு: ______________________________




ஆசிரியர் குறிப்பு:

9.4
9.5

- மாணவர்கள் அண்டை அயலாருடன் துணிவுடன் செயல்படும்போது ஏற்பட்ட மனவுணர்வுகளைப் பட்டியலிடுதல்.
- மேற்கண்ட கதையை மாணவர்கள் நடித்துக் காட்டச் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: மதிப்பிடுதல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்




பாடம் 6

# துணிவைக் கடைப்பிடிப்போம்




1. இது போன்ற துணிச்சல் மிக்க காரியங்களைச் செய்து யாரிடமாவது பாராட்டைப் பெற்றுள்ளாயா? விவரித்து எழுதுக.

___________________________________________

___________________________________________

2. இது போன்ற துணிச்சல் மிக்க காரியங்களைச் செய்வதால் நம் சமூகத்திற்கு என்ன நன்மைகள் ஏற்படுமென நினைக்கிறாய்?

___________________________________________

___________________________________________

ஆசிரியர் குறிப்பு:

9.3
9.4
9.5



- அண்டை அயலாரிடம் துணிவான செயலில் ஈடுபடுவதன் அவசியத்தை வலியுறுத்துதல்.
- அண்டை அயலாருக்கு எச்சூழலில் துணிவுடன் உதவலாம்; உதவக் கூடாது என்பதை விளக்குதல்.
- அண்டை அயலாருக்காகத் துணிவாகச் செயலில் நீ ஈடுபட்ட நிகழ்வுகளை வகுப்புமுறையில் நடித்துக் காட்டுதல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை   உ.சி.தி: சீர்தூக்கிப்பார்த்தல்   21ஆம் நூ. தி: சிந்தனையாளர்




# மதிப்பீடு

**அ. ஏற்பட்ட மனவுணர்வை வண்ணமிடுக.**

உன் அண்டை வீட்டில் புதர் மண்டியிருப்பதால், பாம்பு போன்ற உயிரினங்கள் வர வாய்ப்பு இருப்பதைத் துணிவுடன் கூறியவுடன் அண்டை வீட்டார் சரியான தீர்வு கண்டனர்.

- வருத்தம்
- மகிழ்ச்சி
- கோபம்

**ஆ. கீழ்க்காணும் சூழலில் நீ எப்படித் துணிவைக் கடைப்பிடிப்பாய்? பதிலளித்திடுக.**

1. அண்டை வீட்டார் தொலைக்காட்சியை எப்போதும் அதிக ஒலியுடன் வைத்துப் பார்க்கின்றனர்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

2. அண்டை வீட்டார் எப்பொழுதும் குப்பைகளைக் கால்வாயில் கொட்டுகின்றனர்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

3. அண்டை வீட்டாரின் வளர்ப்புப் பிராணி உங்கள் வீட்டில் அசுத்தம் செய்கிறது.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

9.3
9.5



ஆசிரியர் குறிப்பு:


- இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்யப் பணித்தல்.





# நேர்மை

பாடம் 1

## நேர்மை கொள்வோம்




பாலனிடம் காணப்படும் நேர்மை மனப்பான்மையைப் பற்றிக் கலந்துரையாடுக.

______________________________________________


**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் 2 | **ஆம் நூ. தி:** தொடர்புகொள்ளும் திறன்

கருத்துப்படிவம்

பாடம் 2

# நேர்மையில் மனமகிழ்வோம்

ஒரு நாள் குமணன் பள்ளி செல்லும் வழியில் ஒரு பணப்பையைக் கண்டெடுத்தான். அதில் நிறைய பணம் இருந்தது. அ∴து அவனது அண்டை வீட்டாரான திருமதி சோங்கின் பணப்பை. அவன் அதனை எடுத்துக் கொண்டு அவரின் வீட்டிற்கு விரைந்தான்.




நான் பார்த்தது; நான் சிந்தித்தது; நான் வினவியது நடவடிக்கை முறையில் பதில் எழுதுக.

1. மேற்கண்ட படத்தில் என்ன பார்க்கிறாய்?
2. உன் அன்றாட வாழ்வில் இம்மாதிரியான சம்பவம் நடந்துள்ளதா?
3. நீயாக இருந்தால் என்ன செய்வாய்? நேர்மையை எப்படிக் கடைப்பிடிப்பாய்?

**தெரிந்து கொள்க**

நான் பார்த்தது; நான் சிந்தித்தது; நான் வினவியது (I see, I think, I wonder) எனும் கூறுகளை உள்ளடக்கிய ஒரு நடவடிக்கையாகும்.

ஆசிரியர் குறிப்பு:

10.1
10.2


நடவடிக்கை

- நேர்மையான குணத்தின் தன்மைகளை ஆசிரியரின் வழிகாட்டலுடன் பாடலாக எழுதி வகுப்பில் படைத்தல்.
- அண்டை அயலாரிடையே கடைப்பிடிக்கக் கூடிய நேர்மையான குணத்தின் தன்மைகளைப் பட்டியலிடுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் 21**ஆம் நூ. தி:** அறியும் ஆர்வம்

பாடம் 3

# நேர்மையை நிலைநாட்டுவோம்




நீ அண்டை அயலாரிடம் கடைப்பிடித்த நேர்மையான செயல்களைப் பட்டியலிடுக.

**தெரிந்து கொள்க**

சுய அனுபவத்தைப் (Personal Learning) பகிர்ந்து கொள்ளுதல்.

**ஆசிரியர் குறிப்பு:**


10.2

- அண்டை அயலாரிடம் நேர்மையுடன் நடந்த சில சூழல்களைக் கண்டறிதல்; நடித்துக் காட்டுதல். சுய அனுபவம் (Personal Learning) நடவடிக்கை முறையில் வகுப்பில் பகிர்ந்து கொள்ளுதல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்




# பாடம் 4 நேர்மையுடன் நடப்போம்




நண்பர்களே, நாம் குமரன் போல் நேர்மையைக் கடைப்பிடிக்கும்போது நமக்குப் பல நன்மைகள் ஏற்படும். அவை:

i) அனைவரும் நம்மை விரும்புவர்.
ii) மதிப்பும் மரியாதையும் உயரும்.
iii) நம்மீது நம்பிக்கை ஏற்படும்.
iv) நாம் எவருக்கும் பயப்பட வேண்டாம்.
v) நம் குடும்பத்தின்மீது நல்ல மரியாதை உருவாகும்.

பார்த்து மகிழுங்கள்

1 நீ குமரனைப்போல் நேர்மையாக நடந்து கொண்ட சம்பவம் ஒன்றனை உன் வகுப்பில் கலந்துரையாடு.

___

10.3
10.4



ஆசிரியர் குறிப்பு:


- நேர்மையாகச் செயல்பட்ட செயல்களையும் நன்மைகளையும் கற்றல் உலா (Gallery Walk) நடவடிக்கை முறையில் வகுப்பில் மேற்கொள்ளுதல். அதனால் ஏற்படும் மனவுணர்வைக் கலந்துரையாடுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பயன்படுத்துதல்    21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

வளப்படுத்துதல்

பாடம் 5

# நேர்மையைப் பாராட்டுவோம்



மதன் தன் அண்டை வீட்டு நண்பன் முகமதுவிடம் மிதிவண்டியை இரவல் கேட்டான். முகமது மிதிவண்டி பழுதடைந்திருப்பதாகக் கூறி இரவல் தர மறுத்துவிட்டான்.

மனவுணர்வு: வருத்தம் ஏற்பட்டது.

ஏன்: முகமது கொடுக்க மனமில்லாமல் பொய் கூறியது.



அண்டை வீட்டுப் பாத்திமாவும் அவள் அக்காவும் விளையாட்டுப் பூங்காவிலிருந்து புறப்படும்போது கைக்கடிகாரத்தை மறந்து விட்டுச் செல்வதைப் பார்த்த சசி அவர்களை அழைத்து அக்கடிகாரத்தைக் கொடுத்தான்.

மனவுணர்வு: ______________________

ஏன்: ______________________



ரகுமான் தன் அண்டை வீட்டு அநேகனிடம் இரவல் வாங்கிய புத்தகத்தைத் தொலைத்து விட்டான். பின், உண்மையைக் கூறி புதிய புத்தகம் ஒன்றை வாங்கித் தந்தான்.

மனவுணர்வு: ______________________

ஏன்: ______________________

10.2
10.3
10.4
10.5

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடம் நேர்மைப் பண்பைக் கடைப்பிடிக்கும் பொழுது ஏற்படும் மனவுணர்வைக் கூறச் செய்தல்; நடிக்கச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்    உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

வளப்படுத்துதல்

# பாடம் 6 நேர்மையினால் உயர்வோம்




வரதன் தனக்கு அளித்த காற்பந்துக் குழுவின் தலைவர் பொறுப்பில் நேர்மையை எவ்வாறு கடைப்பிடிப்பான்? பட்டியலிடுக.

வரதனின் நேர்மை (குழுத்தலைவர்)

**தெரிந்து கொள்க**

கருத்தூற்றுமுறை (Brainstorming). குழுவாகக் கலந்தாய்வு செய்யும்; ஆக்கப்பூர்வமான கருத்துகளைக் கூறும்; விரிவுபடுத்தும்; தகவல்களைச் சேகரிக்கும் ஒரு செயல்முறையாகும்.

**ஆசிரியர் குறிப்பு:**

10.5

- அண்டை அயலாரிடையே நேர்மைப் பண்புச் செயலைக் காட்டும் சூழலை உருவாக்கி நடிக்கச் செய்தல். கருத்தூற்று முறையில் (Brainstorming) நடவடிக்கையை மேற்கொண்டு நேர்மையைக் கடைப்பிடிக்கும் முறைகளை அறிதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

வளப்படுத்துதல்

# பாடம் 7 நேர்மையோடு வாழ்வோம்


முரளி : தங்கள் வீட்டின் சுவரில் எழுதப்பட்டுள்ள வரிகள் கருத்துள்ளவையாக இருக்கின்றன தாத்தா.

தாத்தா : ஆம் முரளி, வாழ்க்கையில் நேர்மைக் குணம் மிகவும் அவசியம் ஆயிற்றே. அதை முதலில் அண்டை அயலாரோடு செயல்படுத்த வேண்டும்.

முரளி : எப்படித் தாத்தா?

தாத்தா : அண்டை அயலாரோடு எப்போதும் பொய் பேசுதல் கூடாது. அதே நேரத்தில், மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காகக் காரணமே இல்லாமல் புகழ்ந்து பேசுதலும் கூடாது. எப்போதுமே வெளிப்படையாக உண்மையைப் பேசுதலே சாலச்சிறந்தது முரளி.

முரளி : நானும் அதையே கடைப்பிடிப்பேன் தாத்தா.




1. அண்டை அயலாரோடு நேர்மையுடன் நடந்து கொள்வதற்குத் தாத்தா கூறும் அறிவுரைகளைப் பட்டியலிடுக.
2. நீ அண்டை அயலாரோடு நேர்மையாக நடந்து கொண்ட சூழலை வகுப்பின்முன் பகிர்ந்து கொள்க.

10.2
10.3
10.4

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு நேர்மையாக நடந்து கொண்ட அனுபவத்தை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு

உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை

21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்


KPM

# மதிப்பீடு

## அ. நிறைவு செய்க.

1. அண்டை அயலாரிடம் போலித்தனமான உறவும் நடிப்பும் கூடாது. ________________ இருக்க வேண்டும்.

2. ________________ நடந்து கொண்டால் நம்மை அண்டை அயலார் விரும்புவர்.

3. அண்டை வீட்டாரின்________________ ப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும்.

நம்பிக்கைக்கு | நேர்மையாக | நீதியுடன்

## ஆ. ஏற்புடைய மனவுணர்வைத் தெரிவு செய்க.

1. அம்மா வெளியே சென்றிருந்த நேரத்தில் என்னிடம் இரவல் வாங்கிய மண்வெட்டியைத் திரும்பக் கொடுத்து விட்டதாகப் பொய் கூறுகிறார் அண்டை வீட்டார்.

மனவுணர்வு: கோபம் | மகிழ்ச்சி

## இ. இணைத்திடுக.

| | |
|---|---|
| அண்டை வீட்டாரிடம் உண்மையைப் பேசினால் | மனத்தில் குற்ற உணர்வோடு வாழ நேரிடும் |
| எதிர்வீட்டாரிடம் செய்த தவற்றை ஒப்புக் கொள்ளாமல் இருந்தால் | நம்மீது மதிப்பும் மரியாதையும் கூடும் |

10.3
10.4

ஆசிரியர் குறிப்பு:

- இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.




# ஊக்கமுடைமை

## பாடம் 1 ஊக்கத்துடன் இருப்போம்

சரிதாவும் கவிதாவும் அண்டை வீட்டுத் தோழிகள். இருவரும் குடியிருப்புப் பகுதியில் ஏற்பாடு செய்த பூப்பந்து விளையாட்டுப் போட்டியில் கலந்து முதல் பரிசை வென்றனர். மகிழ்ச்சியில் அவர்கள் உரையாடுவதைக் கேளுங்கள்.



சரிதா, வாழ்த்துகள். நமது இவ்வெற்றியை நினைத்துப் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.



கவிதா, இவ்வெற்றி நமது அயராத உழைப்பிற்கும் விடாமுயற்சிக்கும் கிடைத்த பரிசு.



ஆம் சரிதா, சரியாகக் கூறினாய். நேரத்தை வீணே செலவிடாமல் பயிற்சியை மேற்கொண்டு வெற்றிக்காக அரும்பாடுபட்டோம்.



உண்மை கவிதா. நம்மைப் போல மற்றவர்களும் வெற்றி பெற வேண்டுமாயின் ஊக்கத்துடன் செயல்பட வேண்டும்.




**சிந்தனைத் துளி**


ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 13ஆம் திகதி தேசிய விளையாட்டு நாளாக அனுசரிக்கப்படுகின்றது.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு  உ.சி.தி: பயன்படுத்துதல்  21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

பாடம் 2

திடப்படுத்துதல்

# ஊக்கத்துடன் செயல்படுவோம்




அந்தத் தாத்தாவைப்போல் அண்டை அயலாருடன் இணைந்து நீ ஊக்கத்துடன் செயல்பட்ட செயல்களைக் குறிப்பிடுக.

______________________________________________

ஆசிரியர் குறிப்பு:

11.1
11.2

- அண்டை அயலாருடன் ஊக்கமுடைமையைக் கடைப்பிடித்த செயலை எழுதுதல்.
- அண்டை அயலாருடன் ஊக்கத்துடன் நடந்த சூழலை நடித்துக் காட்டுதல்.
- அண்டை அயலாரிடையே நீ கண்ட, கடைப்பிடித்த ஊக்கமுடைமையைக் கூறுதல்.


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பயன்படுத்துதல்    21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

திடப்படுத்துதல்

பாடம் 3

# ஊக்கமுடைமையைக் கடைப்பிடிப்போம்

முருகனின் வசிப்பிடத்தில் துப்புரவுப் பணி நடைபெற்றது. அவ்வசிப்பிடத்திலுள்ள அனைத்து இன மக்களும் ஒன்று சேர்ந்து ஊக்கத்துடன் துப்புரவுப் பணிகளைச் செய்து, அப்பகுதியையே பூந்தோட்டமாக மாற்றினார்கள்.



1. நீ உன் வசிப்பிடத்தில் இத்தகைய துப்புரவுப் பணிகளில் ஊக்கத்துடன் ஈடுபட்டதுண்டா? அவற்றை வகுப்பில் விவரித்துக் கூறுக.
2. அண்டை அயலாரோடு ஊக்க மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும் முறைகளை ஒட்டி, சுவரொட்டி ஒன்றனைத் தனியாள் முறையில் தயாரித்திடுக; வகுப்பில் படைத்திடுக.

11.1
11.2

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் ஊக்கமுடைமையுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பட்டியலிடச் செய்தல்.


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு  உ.சி.தி: பயன்படுத்துதல்  21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்




பாடம் 4

# ஊக்கமுடைமையை நிலைநாட்டுவோம்

திருவள்ளுவர் வசிப்பிடத்தைச் சிறுவர்கள் சுத்தம் செய்ய எண்ணினர். சுத்தம் செய்வதன் காரணத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றிக் கலந்துரையாடினர். குழுமுறையில் வேலைகளைப் பகிர்ந்து கொண்டனர்; ஊக்கத்துடன் செயலில் இறங்கினர்.





நமது வசிப்பிடத்தில் நாம் ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்கும்போது

i) வசிப்பிடத்தில் ஏற்படும் பல சிக்கல்களுக்குத் தீர்வு காணலாம்.
ii) நம்மீது மரியாதையும் நம்பிக்கையும் அதிகரிக்கும்.
iii) வசிப்பிடத்தில் வேலைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தலாம்.
iv) அண்டை அயலாரிடையே நட்பும் நல்லுறவும் வளரும்.

**தெரிந்து கொள்க**

சுழல் சக்கர விளையாட்டு (Wheel Game)

11.3




ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு ஊக்கத்துடன் செயல்படுவதன் அவசியத்தைக் கண்டறிதல்; ஆசிரியர் சுழல் சக்கர விளையாட்டைத் தயாரித்து வகுப்பு முறையில் விளையாடச் செய்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்


KPM

வளப்படுத்துதல்

பாடம் 5

# ஊக்கமுடைமையைப் பாராட்டுவோம்

என் அண்டை வீட்டுக்காரரான திரு. சூடிப் சிங், கம்போங் முஹிபா குடியிருப்பின் சிறந்த தலைவருக்கான விருதை வென்றார். என் பள்ளி இடுபணிக்காக அவரைப் பேட்டி கண்டேன்.



கேசவன்: வணக்கம் திரு. சூடிப் சிங் அவர்களே! நான் என் பள்ளி இடுபணிக்காக உங்களைப் பேட்டி காண வந்துள்ளேன்.

சூடிப் : வணக்கம், கேசவன். அப்படியா?

கேசவன்: முதலில் சிறந்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களுக்கு வாழ்த்துகள். தங்களுக்குக் கிடைத்த விருதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சூடிப் : நன்றி, மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். அண்டை அயலாரின் முயற்சிக்கும் ஒத்துழைப்பிற்கும் கிடைத்த வெற்றியாக இதனைக் கருதுகிறேன்.

கேசவன்: இவ்வெற்றியைப் பெற என்ன செய்தீர்கள்?

சூடிப் : எங்கள் குடியிருப்பின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கப் பயனுள்ள நடவடிக்கைகளை அண்டை அயலாருடன் ஊக்கத்தோடு மேற்கொண்டேன். தூய்மைக் கேட்டைத் தவிர்த்தோம்; இயற்கையை நேசித்தோம். இதற்கு அண்டை அயலார் முழு ஊக்கத்துடன் ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

கேசவன்: நன்றி, ஐயா.

11.4
11.5

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் ஊக்கமுடைமையுடன் நீ நடந்து கொண்டபோது ஏற்பட்ட மனவுணர்வைக் கூறுதல்.
- மேற்கண்ட உரையாடலை மாணவர்கள் நடித்துக் காட்டச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்   உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல்   21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

வளப்படுத்துதல்

பாடம் 6

# ஊக்கத்துடன் ஒன்றிணைவோம்

அண்டை வீட்டுக்காரரான திரு. ரம்லியின் வீட்டின் திருமண நிகழ்ச்சி ஏற்பாட்டுப் பணியில் அனைவரும் முழுமனத்துடனும் ஊக்கத்துடனும் செயல்பட்டனர். அங்கு வந்த கணேசனும் அன்வாரும் வெறுமனே அமர்ந்து கதை பேசி சிரித்துக் கொண்டிருந்தனர்.



1. கணேசன், அன்வார் இவர்களின் செயலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?
2. இவர்கள் இருவரின் செயலின் விளைவுகள் என்னவாக இருக்கும்?
3. அண்டை அயலார் உன் ஊக்கமுடைமையைக் கண்டு பாராட்டும்போது உன் மனநிலை என்ன? விவரிக்கவும்.

11.4

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்க வலியுறுத்துதல்.
- அண்டை அயலாரிடம் எவ்வகையில் ஊக்கமுடைமையுடன் நடக்க வேண்டும் என்பதை வகுப்பு முறையில் கலந்துரையாடுதல்.

நடவடிக்கை

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்



KPM

வளப்படுத்துதல்

பாடம் 7

# ஊக்கமது கைவிடேல்

முயல் கூட்டம் ஒன்று தங்கள் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு அடர்ந்த காட்டு வழியாகப் பயணம் செய்து கொண்டிருந்தது. போகும் வழியில் ஏராளமான புதர்களும் குழிகளும் இருந்தன. திடீரென்று ஓரிடத்திலிருந்த ஆழமான குழிக்குள் இரண்டு முயல்கள் தவறி விழுந்துவிட்டன. “நாம் அனைவரும் எப்படியாவது முயற்சி செய்து அவர்களை விரைவில் வெளியில் கொண்டுவர வழி தேட வேண்டும். அனைவரும் என்ன செய்யலாம் என்று யோசியுங்கள்,” என்று ஒரு முயல் ஆலோசனை கூறியது.





அதே சமயத்தில், குழியில் விழுந்த அந்த இரண்டு முயல்களும் மிகவும் பதற்றத்துடன் குழிக்குள் இருந்து குதித்துக் குதித்து வெளிவர முயற்சித்தன. அதைப்பார்த்த மற்ற முயல்கள், “உங்களால் முடியும்,” என்றன. “நாங்களும் உங்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்கிறோம்,”என்றன. மேலும் யோசிக்காமல் அனைத்து முயல்களும் ஒன்றாக இணைந்து சுற்றியுள்ள மணலைக் குழியில் தள்ளின. குழிக்குள் இருந்த இரு முயல்களும் சிறிதும் மனம் தளராமல் தங்களது முயற்சியைத் தொடர்ந்தன. குழிக்கு மேலிருந்த முயல்கள் மீண்டும் உரத்த குரலில், “தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்,” என்று ஊக்கம் தந்தன. இறுதியில் இரண்டு முயல்களும் தங்களது முழு மூச்சையும் இழுத்துப் பிடித்து ஒரே தாவாகத் தாவி, குழியை விட்டு வெளியே வந்தன. இதைக்கண்ட மற்ற முயல்கள் மகிழ்ச்சியடைந்தன. “நீங்கள் கொடுத்த ஊக்கத்தால்தான் நாங்கள் இருவரும் இன்று பிழைத்தோம். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பதை நாங்கள் நன்கு அறிந்து கொண்டோம்,”என்று கூறி மனமகிழ்ந்தன.

1 மேலேயுள்ள கதையில் வரும் முயல்கள் ஊக்கமின்றி இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? ஏன்?

2 கதையில் வரும் இரண்டு முயல்களும் எத்தகைய பண்பைக் கொண்டுள்ளன? இதனால் அவை பெற்ற நன்மைகளைப் பட்டியலிடுக.

11.3
11.4

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரிடையே ஊக்கமுடைமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை அறிதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

# மதிப்பீடு

**அண்டை அயலாருடன் நீ கடைப்பிடித்த ஊக்கம் நிறைந்த செயல்களின் நன்மைகளை அறிவோம்.**

நீ ஊக்கத்துடன் செய்த செயல்களின் நன்மைகளுக்கான
சுய மதிப்பீடு

பெயர்: ______________________________

ஆண்டு: ______________________________

பள்ளி: ______________________________

| எண் | ஊக்கமிகு செயல்கள் | நன்மைகள் | சுயமதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | கால்வாயில் விழுந்த அண்டை வீட்டுக்காரரின் பூனைக் குட்டியைப் பலமுறை முயற்சி செய்து காப்பாற்றியது. | பாராட்டைப் பெற்றது | 90 / 100 |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**தெரிந்து கொள்க**

மாணவர்கள் தங்களின் புரிதலுக்கு ஏற்றவாறு சரிபார்ப்புப் பட்டியலில் (Check List) குறியிடுவர் .

11.1
11.5

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: மதிப்பிடுதல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்


KPM



## மதிப்பீடு

**நிறைவு செய்க.**

| ஊக்கமிகு செயல்கள் | இதனால் ஏற்படும் நன்மைகள் |
| --- | --- |
| நெகிழியின் பயன்பாட்டை நிறுத்துவதற்குத் தொடர் முயற்சி செய்கிறோம். | சுற்றுச்சூழலின் மாசு குறைகின்றது. |
| ______ | ______ |
| ______ | ______ |





**கொன்றை வேந்தனுக்கு ஏற்ற விளக்கத்தை எழுதுக.**

ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு

விளக்கம்: ______



11.3
11.5

ஆசிரியர் குறிப்பு:

- இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

தொகுதி 12

நெறி அறிமுகம்

# ஒத்துழைப்பு

பாடம் 1

பாட அறிமுகம்

## ஒத்துழைப்பு நல்குவோம்






1. திருமண முன்னேற்பாட்டில் அண்டை அயலாரோடு சேர்ந்து நீ மேற்கொள்ளும் பணிகளைப் பட்டியலிட்டுக் கூறுக.
2. நீ ஏன் அண்டை அயலாரின் வீட்டு நிகழ்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்?

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: பயன்படுத்துதல் 21ஆம் நூ. தி: குழுவாகச் செய்தல்

பாடம் 2

கருத்துப்படிவம்

# ஒத்துழைப்பைக் கடைப்பிடிப்போம்

முகிலன் அண்டை அயலாருக்கு ஒத்துழைப்பைத் தந்த நடவடிக்கைகளைக் காண்போம்.




படத்தில் காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி நீ என்ன கருதுகிறாய்? ஏன் என்பதனை உரக்கக் கூறும் பதில் முறையில் குழுவோடு சேர்ந்து பதில் அளித்திடுக.

**தெரிந்து கொள்க**

மாணவர் குழுவில் உரக்கக் கூறும் பதில்களில் (Idea Rush) சரியானவற்றை ஆசிரியர் தெரிவு செய்தல்.

ஆசிரியர் குறிப்பு:

12.1 நடவடிக்கை

- அண்டை அயலாரோடு ஒத்துழைப்புடன் வாழ்வதற்கான எடுத்துக்காட்டுகளைக் கூறுதல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: ஆக்கச்சிந்தனை | 21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்




# பாடம் 3 ஒத்துழைத்து வாழ்வோம்

மகிழினி டெங்கிக் காய்ச்சலில் பாதிக்கப்பட்டிருந்தாள். ஆகையால், அவள் வசிப்பிடத்தில் துப்புரவுப் பணி நடைபெற்றது. அண்டை அயலார் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நீர் தேங்கியிருக்கும் பகுதிகள் அனைத்தையும் சுத்தம் செய்தனர்.




உன் வசிப்பிடத்தில் இத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டதுண்டா? பாதிப்புகளை எதிர்கொள்ள நீ அண்டை அயலாருடன் சேர்ந்து எவ்வகையான ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளாய் என்பதை வகுப்பில் கலந்துரையாடுக.

**தெரிந்து கொள்க**

செயல்திட்ட நடவடிக்கை (Action Plan).

**ஆசிரியர் குறிப்பு:**

12.1
12.2




- அண்டை அயலாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனும் அவசியத்தை வலியுறுத்துதல்.
- அண்டை அயலாருக்கு எவ்வகையில் உதவலாம் என்பதை ஆசிரியர் விளக்குதல்.
- அண்டை அயலாரிடையே ஒத்துழைப்பைக் கடைப்பிடிக்கும் முறைகளைச் செயல்திட்ட நடவடிக்கையைக் கொண்டு விளக்கிடுதல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்     உ.சி.தி: ஆக்கச்சிந்தனை     21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

குறைநீக்கல்

# பாடம் 4 ஒத்துழைப்பைப் போற்றுவோம்



ஒற்றுமையாய் வாழ்வதாலே
உண்டு நன்மையே
வேற்றுமையை வளர்ப்பதனாலே
விளையும் தீமையே

உணர்வோடு ஒன்றியே உருவாகும் பாசமே
அணையாத தீபமாய் சுடரெங்கும் வீசுமே
நெஞ்சில் உண்டான அன்பையே
துண்டாடி வம்பையே உறவாகத் தந்திடும்
சிலர் சொல்லை நம்பியே
வேற்றுமையை வளர்ப்பதனாலே
விளையும் தீமையே

துணையின்றி வெண் புறா தனியாக வந்ததே
வன வேடன் வீசிய வலை தன்னில் வீழ்ந்ததே
இனம் யாவும் சேர்ந்து தான்
அதை மீட்டுச் சென்றதே
கதையான போதிலும் கருத்துள்ள பாடமே
வேற்றுமையை வளர்ப்பதனாலே
விளையும் தீமையே

**இயற்றியவர்,**
**மருதகாசி**

**பாடி மகிழுங்கள்**

1. மேற்கண்ட பாடலில் ஒற்றுமையாய் வாழ்வதனால் ஏற்படும் நன்மைகளைக் கண்டறிந்து உன் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்க.
2. அண்டை அயலாரோடு ஒற்றுமையாய் வாழ்வதனால் ஏற்படும் நன்மைகளைப் பல்வேறு மூலங்களிலிருந்து அறிந்து விவரித்துக் கூறுக.

12.2
12.3

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு ஒத்துழைத்து வாழ்வதனால் ஏற்படும் நன்மைகளைப் பல்வேறு மூலங்களிலிருந்து அறிந்து விவரித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: தொடர்பு கொள்ளும் திறன்





பாடம் 5

# ஒத்துழைத்து உழைப்போம்



நான்கு கம்பர் வகுப்பாசிரியர், மாணவர்கள் அண்டை அயலாருக்குச் செய்த உதவிகளையும் மனவுணர்வுகளையும் சம்பவப் பதிவுக் குறிப்பு (Anecdote Record) மூலமாகத் தயாரித்துச் சக மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கூறினார். தமிழினி, அவள் நண்பர்களுடன் சம்பவப் பதிவுக் குறிப்பு தயார் செய்கிறாள்.




| சம்பவப் பதிவுக் குறிப்பு | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: தமிழினி த/பெ இனியன் | | ஆண்டு: 4 கம்பர் | | |
| பால்: பெண் | | அகவை: 10 | | |
| திகதி | இடம் | நடந்தவை | கருத்து | மனவுணர்வு |
| 12.01.2020 | வீட்டின் முன்புறம் | இயற்கை வளங்களைப் பாதுகாக்க வீட்டிற்கு ஒரு மரம் நடுவோம் எனும் நடவடிக்கையில் அண்டை அயலாரோடு சேர்ந்து ஈடுபட்டேன். | இயற்கையின்மேல் மிகுந்த அன்பு கொண்டுள்ளேன். | |
| ஆசிரியர் பெயர்: திருமதி மலர்க்கொடி | | | | |

12.4
12.5

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் ஒத்துழைத்த செயல்களையும் மனவுணர்வுகளையும் சம்பவப் பதிவுக் குறிப்பு (Anecdote Record) வழி வகுப்பு முறையில் படைத்திடுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: மதிப்பிடுதல்    21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

பாடம் 6

வளப்படுத்துதல்

# ஒத்துழைத்து வெல்வோம்

ஒரு மரத்தில் தாய்க்குருவி ஒன்று தன் குஞ்சுகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள் வீசிய பலத்த காற்றில் அதன் கூடு சிதைந்து போனது. அத்தாய்க்குருவியும் அதன் குஞ்சுகளும் தங்களின் வசிப்பிடத்தை இழந்தன. மேலும், அத்தாய்க்குருவியின் காலில் பலத்த காயம் ஏற்பட்டுப் பறக்க முடியாமல் போனது. தாய்க்குருவி தன் குஞ்சுகளுக்கு உணவு கொடுக்க இயலாமல் போனதால் குஞ்சுகள் பசியால் தவித்தன. இதையுணர்ந்த பக்கத்து மரத்தில் வசிக்கும் குருவி, தாய்க்குருவியின் மீதும் அதன் குஞ்சுகளின் மீதும் பரிதாபப்பட்டது.



உடனே அக்குருவி அம்மரத்தில் வாழும் மற்ற குருவிகளையும் அழைத்து, அத்தாய்க்குருவிக்கும் அதன் குஞ்சுகளுக்கும் உதவ முற்பட்டது. அம்மரத்திலேயே கூடு கட்டித்தர வேண்டும் என்று குருவிகள் ஒன்றாக இணைந்து முடிவு செய்தன.





அனைத்துக் குருவிகளும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்துக் கூட்டை இழந்து தவிக்கும் தாய்க்குருவிக்கும் அதன் குஞ்சுகளுக்கும் கூடு கட்டி உண்ண உணவும் கொடுத்தன. அத்தாய்க்குருவியும் அதன் குஞ்சுகளும் அனைத்துக் குருவிகளுக்கும் நன்றி கூறி அம்மரத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தன.

மேலே உள்ள கதையில் காணப்படும் நற்செயல்களை நண்பர்களுடன் கலந்துரையாடி, அண்டை அயலாரோடு ஒத்துழைத்து வாழும்போது ஏற்படும் மனவுணர்வுகளைப் பகிர்ந்து கொள்க.

______________________________

12.3
12.4

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு ஒத்துழைத்துப் பகிர்ந்து வாழும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்க ஊக்குவித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

வளப்படுத்துதல்

பாடம் 7

# ஒத்துழைப்புடன் செயல்படுவோம்



சூழல் 1

கேவினும் அவனது அண்டை அயலாரும் ரம்லியின் நோன்புப் பெருநாள் திறந்த இல்ல உபசரிப்பு ஏற்பாட்டில் உதவுகிறார்கள்.

ஒற்றுமையைக் காட்டும் செயல்கள்:
அனைவரும் ஒற்றுமையுடன் உதவியது.

நன்மை:
விரைவாகச் செய்ய முடிந்தது.

மனவுணர்வு:
மனமகிழ்ச்சி.



சூழல் 2

குடியிருப்பில் இருக்கும் சில இளைஞர்கள் 'ருக்குன் தெத்தாங்கா இயக்கத்தின்' ஒத்துழைப்புடன் ஒரு காற்பந்துப் போட்டிக்கு ஏற்பாடு செய்தனர்.

ஒற்றுமையைக் காட்டும் செயல்கள்:
______________________

நன்மை:
______________________

மனவுணர்வு:
______________________



சூழல் 3

'ஏடீஸ்' கொசு பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் நாகேந்திரன் தன் நண்பர்களுடன் ஒத்துழைத்தான்.

ஒற்றுமையைக் காட்டும் செயல்கள்:
______________________

நன்மை:
______________________

மனவுணர்வு:
______________________

12.1
12.4

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் ஒற்றுமையுடன் ஒத்துழைத்து வாழ்வதைப் பற்றிக் குழுமுறையில் கலந்துரையாடுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு　　உ.சி.தி: மதிப்பிடுதல்　　21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்



# மதிப்பீடு

**அ. கீழ்க்காணும் நடவடிக்கைகளை அண்டை அயலாரோடு ஒத்துழைத்துச் செயல்படுவதால் ஏற்படும் நன்மைகளைத் தெரிவு செய்து எழுதுக.**

i) துர்நாற்றம் வீசும் கால்வாயைச் சுத்தம் செய்தல்.

ii) அண்டை வீட்டாரின் திருமண விழாவில் உதவி புரிதல்.

iii) உடைந்த பாலத்தைச் சரி செய்தல்.

| | | |
|---|---|---|
| போக்குவரத்துத் தடை நீங்கும். | அலங்கரிப்பு வேலைகளைச் சீக்கிரம் செய்து முடித்து விடலாம். | அண்டை அயலாருக்கு நோய் ஏற்படாது. |

**ஆ. அண்டை அயலாருடன் இணைந்து ஒத்துழைப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பூர்த்தி செய்க.**

| இணைந்து செய்யக்கூடிய பொறுப்புகள் | ஒத்துழைப்பால் ஏற்படும் நன்மைகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

12.3



ஆசிரியர் குறிப்பு:

- இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

தொகுதி 13

நெறி அறிமுகம்


# மிதமான மனப்பான்மை

பாடம் 1

பாட அறிமுகம்

## மிதமான மனப்பான்மை கொள்வோம்






1. மேற்கண்ட சூழலில் மிதமான மனப்பான்மை அற்ற செயலைப் பட்டியலிடுக.
2. மேற்கண்ட சூழலில் நீ கடைப்பிடிக்க வேண்டிய மிதமான செயல்களை நண்பர்களுடன் கலந்துரையாடிப் பட்டியலிடுக.


வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்    உ.சி.தி: பயன்படுத்துதல்    21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்


கருத்துப்படிவம்

பாடம் 2


# மிதமான மனப்பான்மையை அறிவோம்

மலர்விழியின் அண்டை அயலார் மிதமான மனப்பான்மையைக் கொண்டவர்கள். இதோ, அவர்களின் மிதமான செயல்களைப் பார்ப்போம்.






1. மலர்விழியின் அண்டை அயலார்களின் மிதமான மனப்பான்மையைப் பற்றிக் கூறுக.
2. நீயும், உன் குடும்பத்தாரும் உன் வசிப்பிடத்தில் மேற்கொண்ட மிதமான மனப்பான்மையைக் குறிக்கும் செயல்களைக் கூறுக.

13.1
13.2

நடவடிக்கை

**ஆசிரியர் குறிப்பு:**

- அண்டை அயலாருடன் மிதமான வாழ்க்கை வாழ்வதற்கான எடுத்துக்காட்டுகளும் சிந்தி-இணை-பகிர் நடவடிக்கையின்வழி கண்டறிந்து கூறுதல்; பட்டியலிடுதல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: ஆக்கச்சிந்தனை | 21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

பாடம் 3 திடப்படுத்துதல்

# மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்போம்




அண்டை அயலாரிடையே நீ கடைப்பிடித்த மிதமான மனப்பான்மைச் செயல்களைப் பட்டியலிடுக.

13.1
13.2
13.3

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாருடன் மிதமான பண்பைக் கடைப்பிடிக்கும் முறைகளைப் பட்டியலிட்டு விளக்குதல்.
- அது தொடர்பான சிறுகதை ஒன்றை எழுதுதல்.


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு  உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை  21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்




பாடம் 4

# மிதமான மனப்பான்மையுடன் நடப்போம்

**மிதமான மனப்பான்மையின் நன்மைகள்**




சிக்கனமாக இருக்கலாம்,
சேமிப்பு அதிகரிக்கும்.



**அளவோடு பேசுதல்**

வாக்குவாதத்தைத் தடுத்து நட்பை நீட்டிக்கும்.

**மிதமான மனப்பான்மை இன்மையின் தீமைகள்**



பண விரயம் ஏற்படும்,
சிக்கனமின்மை ஏற்படும்.



**அளவோடு பேசாமை**

வாக்குவாதத்தை ஏற்படுத்தி நட்பை இழக்கச் செய்யும்.

**அண்டை அயலாரிடையே மிதமான மனப்பான்மை**

- நன்மை
- தீமை

மேற்கண்ட மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பதால் உனக்கும் உன் அண்டை அயலாருக்கும் என்ன நன்மை என்பதனை விவரித்திடுக.

**தெரிந்து கொள்க**

மேடைப் பேச்சு.
(Public Speaking)

13.3



ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் நன்மைகளை மேடைப் பேச்சு (Public Speaking) வழி அறிதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

வளப்படுத்துதல்

பாடம் 5

# மிதமான மனப்பான்மையால் மகிழ்வோம்

| மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும்போது | மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்காதபோது |
|---|---|
| உணவை விரயமாக்காமல் அளவோடு சமைத்து அண்டை அயலாரோடு பகிர்தல் மகிழ்ச்சி தரும். | அதிக சத்தத்தோடு அண்டை வீட்டின் தொலைக்காட்சி ஒலித்தால் கோபம் ஏற்படும். |
| பிறந்தநாள் விழாவை ஆடம்பரமின்றி கொண்டாடுதல் மகிழ்ச்சி தரும். | அண்டை வீட்டின் மின் விசிறி தேவையற்ற நேரங்களில் சுழன்று கொண்டிருந்தால் வருத்தம் ஏற்படும். |
| வீட்டின் திரைச்சீலைகளைத் தூய்மையாக வைத்திருந்தால் அடிக்கடி புதிதாக மாற்றத் தேவை இல்லை. பணவிரயத்தைத் தவிர்த்து மனநிறைவைத் தரும். | அண்டை வீட்டார் குழாய் நீரைத் தேவையில்லாமல் விரயமாக்குவது வருத்தத்தைத் தரும். |

மேற்கண்ட செயல்களின் விளைவுகளை நண்பர்களுடன் கலந்துரையாடுக, அண்டை அயலாரோடு மிதமான மனப்பான்மையுடன் வாழும்போது ஏற்படும் மனவுணர்வுகளைப் பகிர்ந்து கொள்க.

______________________________________________

13.4

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:


- அண்டை அயலாரோடு மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்கையில் ஏற்பட்ட மனவுணர்வைக் கூறுதல்; வெளிக்காட்டுதல்.

வளப்படுத்துதல்

பாடம் 6

# மிதமான மனப்பான்மையால் வெல்வோம்

நண்பர்களாகிய அலியும் கர்பாலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தியாகுவின் வீட்டில் கூடுவர். அவர்கள் தொலைக்காட்சி பார்க்கும் பொழுதும் விளையாடும் பொழுதும் அதிக சத்தம் போடுவர். இவர்களின் செயல் அண்டை வீட்டாருக்குத் தொந்தரவாக இருந்தது. அவர்கள் தியாகுவின் பெற்றோரிடம் புகார் செய்தனர்.



1. தியாகுவும், அவன் நண்பர்களும் செய்தது சரியா? ஏன்?
2. மேற்கண்ட சூழலில் மிதமான மனப்பான்மையை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும்?
3. மிதமான மனப்பான்மையுடன் நமது அண்டை அயலாருடன் பழகும்போது ஏற்படும் நன்மைகள் யாவை? கலந்துரையாடுக.

ஆசிரியர் குறிப்பு:

13.3
13.5

நடவடிக்கை

- அண்டை அயலாருடன் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பதை வலியுறுத்துதல்.
- அண்டை அயலாருடன் மிதமாக நடந்து கொண்ட சில சூழல்களை நண்பர்களுடன் நடித்துக் காட்டுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

வளப்படுத்துதல்

பாடம் 7

# மிதமான மனப்பான்மையோடு உயர்வோம்



மேற்கண்ட சூழலில் நாம் அண்டை அயலாருடன் எவ்வாறு மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்கலாம் என்பதைப் பற்றிக் கலந்துரையாடுக.

13.2
13.5

நடவடிக்கை

ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடித்த சூழலை நடித்துக் காட்டுதல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: மதிப்பிடுதல் 21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

# மதிப்பீடு

**கூற்றுகளைச் சரியான பெட்டிக்குள் போடவும்.**

- சாந்தி தனது புதிய வீட்டைப் பற்றித் தற்பெருமையாகப் பேசினாள்.
- திரு. அபு மகனின் பிறந்த நாளை எளிமையாகக் கொண்டாடினார்.
- விருந்து நிகழ்வில் திருமதி பாத்திமா உணவை மீதம் வைக்காமல் உண்டார்.
- பக்கத்து வீட்டு நோயாளியைக் கருத்தில் கொண்டு முகமது வானொலியின் சத்தத்தைக் குறைத்தான்.
- அண்டை வீட்டுக்காரர் பகலிலும் எரிகின்ற மின் விளக்கை அணைக்கவில்லை.
- எதிர்வீட்டு முதியவரிடம் அளவோடு பேசினான் கண்ணன்.
- சற்குணன் தேவைக்கான செலவை மட்டுமே செய்வான்.
- திருமதி பார்வதி தேவைக்கு அதிகமான ஆபரணங்களை வாங்கினார்.

| மிதமான மனப்பான்மையைக் காட்டும் செயல் | மிதமான மனப்பான்மை அற்ற செயல் |
| --- | --- |
| | |


13.1
13.2

ஆசிரியர் குறிப்பு:

- இப்பயிற்சியை மாணவர்களைச் செய்வித்தல்.

# மதிப்பீடு

**கீழ்க்காணும் சொற்களைக் குறுக்கெழுத்துக் கட்டங்களில் நிறைவு செய்க; அண்டை அயலாருடன் கடைப்பிடிக்க வேண்டிய பண்பினைக் குறிக்கும் சொல்லைக் கண்டு பிடித்து எழுதுக.**




பண்புக்கூறு: ______________________________

13.2
13.3
13.4

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு

உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை


21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

தொகுதி 14 நெறி அறிமுகம்

# விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை

பாடம் 1

## விட்டுக்கொடுப்போம்




திரு. காசிம் : திரு. பன்னீர் திருமண விருந்துக்கான பந்தல் போடுகையில் உங்கள் வீட்டுப் பகுதியையும் இணைத்துப் போட்டுக்கொள்ள முடியுமா?

திரு. பன்னீர் : அதற்கென்ன, தாராளமாகப் போட்டுக் கொள்ளுங்கள். வேறேதும் உதவி வேண்டுமானாலும் கேளுங்கள். கடந்த மாதம் என் மகளின் நிச்சயதார்த்த விழாவிற்கு நான் உங்கள் வீட்டுப் பகுதியை இணைத்துத்தானே பந்தல் போட்டேன்.

திருமதி பன்னீர்: ஆமாம், மேலும் எங்களுடைய நண்பர்களும் உறவினர்களும் வாகனங்களை நிறுத்துவதற்கு உங்கள் வீட்டின் அருகிலுள்ள காலி இடத்தையும் கொடுத்தீர்களே!

திரு. பன்னீர் : அஃது எங்களுக்குப் பேருதவியாக இருந்தது.

திருமதி காசிம் : நாம் அண்டை வீட்டார் அல்லவா? விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கொண்டிருப்பதால்தான் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

திரு. காசிம் : மிக்க நன்றி. திருமணவிழாவில் குடும்பத்துடன் வந்து கலந்து கொள்ளுங்கள். சென்று வருகிறோம்.

**சிந்தனைத் துளி**

சகிப்புத்தன்மை, ஒற்றுமை, சகோதரத்துவம், நல்லிணக்கம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியன நல்ல சமுதாயம் வளர ஆகச் சிறந்த வழிகளாகும்.


வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்



பாடம் 2

# விட்டுக்கொடுத்து வாழ்வோம்

முஸ்தாபா வீட்டிற்கு உறவினர்கள் வெளியூரிலிருந்து வந்திருக்கின்றனர். அவர்களின் வாகனம் திரு. குருஜித் வீட்டின் முன்புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.




மேற்கண்ட சூழல்களைத் தவிர்த்து நீங்கள் அண்டை அயலாரிடையே எவ்வாறு விட்டுக்கொடுக்கும் பண்பினைக் கடைப்பிடிப்பீர்கள் என்பதைப் பற்றிக் கலந்துரையாடுக.

ஆசிரியர் குறிப்பு:

14.1

- அண்டை அயலாரோடு விட்டுக்கொடுத்து வாழ்ந்த சில சூழல்களைக் கூறுதல்; பட்டியலிடுதல்; நடித்துக் காட்டுதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்





# பாடம் 3 விட்டுக்கொடுத்து நடப்போம்

1 

கார்த்திகை தீபத் திருநாள் அன்று, அண்டை வீட்டுத் தமிழ்மலரும் சோபனாவும் விளக்குகளை உன் வீட்டுச் சுவரில் ஏற்றி வைக்கிறார்கள். நீ என்ன செய்வாய்?

அவரின் பண்டிகையின் நம்பிக்கையை மதித்து அண்டை அயலார் எனும் முறையில் விட்டுக் கொடுத்து அனுசரித்து நடந்து கொள்வேன்.

2 


நீ பட்டணத்திற்குச் செல்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறாய். உன் எதிர் வீட்டுப் பாட்டியும் வாடகை மகிழுந்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். சற்று நேரத்திற்குப் பிறகு வந்த வாடகை மகிழுந்து உன்னிடம் நின்றது. நீ என்ன செய்வாய்?

______________________________

______________________________

3 

உன் எதிர் வீட்டுத் தம்பி, விளையாட்டுத் திடலில் உள்ள ஊஞ்சலை விளையாடத் தனக்குத் தருமாறு கேட்கிறான். நீ என்ன செய்வாய்?

______________________________

______________________________

1. மேற்கண்ட சூழல்களில் ஏன் நீ விட்டுக்கொடுப்பாய் என்பதை எழுதுக.
2. அன்றாட நிகழ்வுகளில் நீ விட்டுக்கொடுத்த சில சூழல்களை நண்பர்களுடன் கலந்துரையாடுக.

**தெரிந்து கொள்க**

நண்பர்களுடன் தலைப்பை ஒட்டிப் பேச வாய்ப்பு கொடுத்தல் (Talk Partners).

ஆசிரியர் குறிப்பு:

14.1
14.2

- அண்டை அயலாருடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும் முறைகளை விளக்குதல்; 'புரோசர்' (Brochure) நிகழ்வறிக்கையைத் தயாரித்து அனைவரிடமும் கொடுத்தல்.


வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

குறைநீக்கல்

பாடம் 4

# விட்டுக்கொடுத்துப் பழகுவோம்

1



பெருநாள் காலங்களில் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுவது இயல்பு. அண்டை அயலார் எனும் முறையில் நீங்கள் அனுசரித்து நடப்பதன் முக்கியத்துவம் என்ன?

______________________________

______________________________

2




அண்டை வீட்டு நண்பனிடம் பொறுமையைக் கடைப்பிடித்து விட்டுக் கொடுப்பதன் முக்கியத்துவம் என்ன?

______________________________

______________________________

3



அண்டை வீட்டுக்காரர் தம் மகனின் திருமணத்தை முன்னிட்டு உன் வீட்டுப் பகுதியையும் இணைத்துப் பந்தல் போட்டுள்ளார். உன் பெற்றோர் அனுமதித்தனர். காரணம் என்னவாக இருக்கும்?

______________________________

______________________________

பல்லினத்தைச் சேர்ந்த அண்டை அயலாரிடத்தில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லை என்றால் என்ன நடக்கும்? ‘டேபல் குலோத்’ நடவடிக்கையின்வழி விவாதித்துத் தீர்வு காண்க.

**தெரிந்து கொள்க**

ஆசிரியர் ஒரு பெரிய அட்டையில் கேள்வி தயாரித்து மேசைமீது வைத்தல்; மாணவர்களை ஒவ்வொரு கேள்விக்குமான விடையை எழுதப் பணித்தல். (Table Cloth)

14.2
14.3

நடவடிக்கை


ஆசிரியர் குறிப்பு:

- அண்டை அயலாரோடு விட்டுக் கொடுத்து வாழ்வதன் முக்கியத்துவத்தை ‘டேபல் குலோத்’ (Table Cloth) நடவடிக்கையை மேற்கொண்டு செய்தல்; கண்டறிதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

வளப்படுத்துதல்

# பாடம் 5 விட்டுக்கொடுத்து உயர்வோம்




1. மேற்கண்ட சூழலில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடித்ததால் அமுதாவுக்கு ஏற்படும் மனவுணர்வுகளைக் குறிப்பிடுக.
2. நீ விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும்போது ஏற்படும் மனவுணர்வுகளைப் பட்டியலிடுக.

14.4
14.5

ஆசிரியர் குறிப்பு:

- மாணவர்கள் அண்டை அயலாரிடம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கும்போது ஏற்படும் மனவுணர்வுகளை நடித்துக் காட்டுதல்.


நடவடிக்கை

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

வளப்படுத்துதல்

# பாடம் 6 விட்டுக்கொடுத்து மகிழ்வோம்

**கீழ்க்காணும் சூழலில் நாம் எவ்வாறு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை அண்டை அயலாரோடு பேணலாம் என்பதை வகுப்பில் கலந்துரையாடுக.**




1. உன் தங்கையின் பிறந்தநாள் விழா மிகவும் விமரிசையாக நடந்து கொண்டிருக்கிறது. உன் வீட்டின் வானொலி சத்தத்தால் நோய்வாய்ப்பட்டிருக்கும் அண்டை வீட்டுப் பாட்டியால் உறங்க இயலவில்லை. அதனை ஆதவன் உன்னிடம் கூறுகிறான். நீ என்ன செய்வாய்?




2. அண்டை வீட்டுத் தாத்தா அஞ்சல் நிலையத்தில் நீளமான வரிசையின் இறுதியில் நிற்கின்றார். முன் வரிசையில் நிற்கும் நீ, அவர் வரிசையில் நகர இயலாமல் தடுமாறுவதைக் காண்கிறாய். நீ என்ன செய்வாய்?

ஆசிரியர் குறிப்பு:

14.3 நடவடிக்கை

- அண்டை அயலாருடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வலியுறுத்தல்.
- அண்டை அயலாரிடம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை பற்றி பாடல் ஒன்று தயாரித்து வகுப்பில் பாடி மகிழ்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: ஆய்வுச்சிந்தனை 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்




பாடம் 7

# விட்டுக்கொடுத்துச் செயல்படுவோம்

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை

பொறுமை | சுயக்கட்டுப்பாடு | சகிப்புத்தன்மை

அண்டை அயலாரின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் அறிந்து விட்டுக்கொடுத்து வாழ வேண்டும்.

ஏன்?

விட்டுக்கொடுப்பதால் ஏற்படும் மனவுணர்வுகள்

மகிழ்ச்சி



ஆசிரியர் குறிப்பு:

14.3
14.4
14.5

- அன்றாட வாழ்வில் அண்டை அயலாரிடம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைச் செயல்படுத்தி முன்னுதாரணமாகத் திகழ்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

# மதிப்பீடு

**அ. உன் அண்டை வீட்டார் தங்கள் வீட்டுக் கட்டுமானப் பணியை மேற்கொள்கிறார்கள். அக்கட்டுமானப்பணி உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் தொந்தரவாக இருக்கிறது.**



| நீங்கள் எதிர்நோக்கிய தொந்தரவுகள் | நீயும் குடும்பத்தினரும் சகித்துக்கொண்ட முறை | முக்கியத்துவம் |
|---|---|---|
| 1. தூசு<br>2. ______________<br>3. ______________ | 1. பொறுமையாக வீட்டுக் கதவுகளையும் சன்னல் கதவையும் அடைத்தல்<br>2. ______________<br>3. ______________ | 1. நல்லுறவைக் கடைப்பிடித்தல்<br>2. ______________<br>3. ______________ |

1. விட்டுக் கொடுத்துச் சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தால் அண்டை அயலாரோடு ______________ வாழலாம்.
2. சிக்கல் ஏற்படும்பொழுது ______________ கடைப்பிடிப்போம்.
3. அண்டை வீட்டாரின் பண்பாட்டை மதித்து விட்டுக்கொடுத்து அவர்கள் மனம் ______________ நடந்து கொள்ள வேண்டும்.

ஒற்றுமையாக | பொறுமையைக் | புண்படாமல்

14.2
14.3

ஆசிரியர் குறிப்பு:

- மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்